806

சர்வேஸ்வராய நம.

# நடுத்தீர்வை உலா.

இச்சிறந்த நூலின் ஆசிரியராகிய

மகா-ள-ள-ஸ்ரீ

**கனகப்பபிள்ளை அவர்கள்**

சரவை எட்டுப்பிரதிகளில்

மகா-ள-ள-ஸ்ரீ

**ச. ரா. துரையாபிள்ளை அவர்கள்**

ஆராய்ந்து தெரிந்தெடுத்த 200 செய்யுள்கள்.

O-,14MKC7,N
N15
178243

INOPOLY:
DUSTRIAL SCHOOL PRESS.
1915.

சர்வேஸ்வராயநம.

# நடுத்தீர்வை உலா.

இச்சிறந்த நூலின் ஆசிரியராகிய

மகா-ா-ா-ஸ்ரீ

**கனகப்ப பிள்ளை அவர்கள்**

சரவை ஏட்டுப்பிரதிகளில்

மகா-ா-ா-ஸ்ரீ

**ச. ரா. சூசையாபிள்ளை அவர்கள்**

ஆராய்ந்து தெரிந்தெடுத்த 200 செய்யுள்கள்.

Printed and Published by Rev. Br. Joseph, S.J., Superintendent,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

1915.

OFFICE OF THE REGISTRAR OF ...
10 SEP 1915
MADRAS

Nihil obstat : T. ROCHE, S.J., cens. dep.

Imprimatur :

✠ AUGUSTINUS, S.J.,

*Ep. Trichinopolit.*

178243

600 008.

REGISTRAR OF
10 SEP 19
MADRAS



மகா மதுரம் பொருந்திய சேசுவே!
என்னை நடுத்தீர்க்கிறவராயிராமல்
என் இரட்சகராயிரும்.
(50 நாட் பலன்.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1915
MADRAS

சர்வேஸ்வராயநம.

# நடுத்தீர்வையுலா.

## காப்பு நேரிசை வெண்பா.

பூமிதனை நாதன் பொதுத்தீர்வை கேட்குநாள்
தோமிலாச் சீஷருக்குச் சொன்ன குறி—நேமமுடன்
புத்திதரு மெஞ்ஞானப் போதவுலா வாயியம்பக்
கத்தனிரு பூஞ்சரணே காப்பு.

## நூல் உலா.

1 ஆதிபரா பரன்றும் அம்புவியை யக்கினியா ல்
நீதியுடனெரித்து நீறுக்கி—மேதினியி ல்
2 செத்த ஜனணாமுற்றுய்ச் சீவனுட னேயெழுப் பி
மத்திசமாய் ஞாய வகையறுத்துப்—புத்தியற் ற
3 பாவிகளைத் தீநரகப் பாதாள மேகவெ ன
சாபித்துப் பேயாலே தான்வருந்தக்—கோபித் து
4 தள்ளிவிட்டு நல்லோர்க்குத் தம்மோக்ஷ மேகொடுக் க
வள்ளலெனுங் கர்த்தர் வரும்வகைப்பா—விள்ளினே ன்

5 நீத்திரு நெல்வேலி கித்தேரி முத்துமக ன்
சாதுகன கப்பனென்பான் றானாகும்—ஓதிடக்கே ள்
6 என்பெரிய தாதை இயம்பியவிந்நூற்பய ணை
அன்பதனால் நான்றொகுத் தச்சமைத்தேன்—நண்பர்க ளே
7 எந்தை மறைமுடிவே என்கோவே யென்னாவி ல்
வந்தெழுந்து சீர்நிறைந்த வாக்கருள்வாய்—சந்தம ரி
8 தாயே தமிழ் மணக்குந் தண்காவே நூற்கட லே
நீயே யுதவிசெய்வாய் நேராகச்—சாயா தி
9 மாதவத்தோருள்நீதி மானேசஞ் சூசைமு னி
சாதுரிய வாக்கருள்வாய் தாசனுக்குச்—சாதனையா ய்
10 தற்பரனே வற்செய்யுஞ் சம்மனசே யின்னேர ம்
துப்பற விந்நூற்குத் துணைபுரிவாய்—சிற்பர ம
11 கார்கொண்டவான்றந்தை காய்சினத்தை மாதயவா ய்
சீர்கொண்ட தேவசுதன் தீர்த்திடவே—பார்கொண் ட
12 பாவிகட்காய் மானிடனாய்ப் பாடுபட்டு மூன்றாநா ள்
ஓவியமதாக வுயிர்த்தெழுந்து—பூவுலகி ல்
13 நாற்பது நாளிருந்து ஞானநெறியைக்காட் டி
தீர்க்கமுடன் சீடருக்குச் செப்புகின்றார்—ஏற்கன வே
14 பொன்னுலகம் போகுதியாம் பூவுலகோர் கட்கினிமே ல்
மன்னுநடுத்தீர்க்க வருவமென்று—சொன்னவுட ன்
15 எத்தனை நாளிருக்கு தென்றுசீஷர்கேட் க
அத்தனுரைத்த வகையானது கேள்—நித்த ம்
16 நடக்குங் குறிகளதை நாம்புகல்வோ மென் று
அடக்குமுறச் சொன்னார் ஆனால்—முடக்கமில் லா
17 ஞானக் கலைநிபுணர் நன்காய்ந் தெழுதிய தை
ஈன அறிவோனியற்றுகிறேன்—மானிலத்தி ல்
18 பஞ்சம் வருங்கதிக்கும் பாவத்திற் காக்கினையா ய்
வஞ்சம் பெருங்காற்றாம் வையகத்தில்—சஞ்சலஞ்சே ர்

19 நீரகம்போல செகத்தோர்கள் தேகமதி ல்
மாநெருப்பே மூண்டுவயிறுவிடத்—தீவினையா ல்
20 வாகடத்துக் கெட்டாத வன்னோய்க ளுற்பவித்து ச்
சாகடிக்கு மானிடர்கள் சஞ்சலிப்பார்—ஏகமா ய்
21 மாழ்வார் சிலபேர்கள் மாரும லேபலநா ள்
தாழ்வாருயர்வார்கள் தாரணியே—பாழா க
22 சண்டை படையாலே சாவார்கள் தேகம தை
விண்டோடுஞ் செந்நீர் வெள்ளமென—மண்டலத்தி ல்
23 நாடுவிளையாது நற்காலம் போயொளிக்கு ம்
தேடுதொடர்ந் துலகங் கெட்டுவரும்—சூடா க
24 தானியங் கொள்ளுதற்கு தட்டளிந்தலைந்துலைந் து
மானிடர்கள் வெம்பசியால் வாடிநிற்பார்--வானி ன்
25 வளமாரி பெய்யாமல் வானஞ் சுருங்கு ங்
களையாற் பயிர்கள் கசங்கும்—பிழையா க
26 வெள்ளத்தாற் பஞ்சமதாம் வெஞ்சாவியாகிவிடு ம்
பள்ளப்பணை நிலங்கள் பாழடையும்—விள்ளரி ய
27 நெல்விரைத்து நாட்கடத்த நேராது மானிடர்க ள்
புல்தெளித்தே யுண்பார்கள் போசனமாய்—பொல்லா த
28 நோய்விழுகு மேபயிரில் நோய்ப்பூச்சி வெட்டிவிடு ம்
காய்கனியுமப்படியே காணவருந்—தேயமதி ல்
29 வெட்டுக் கிளிப்படைகள் வெள்ளமெனத் திரண் டு
மட்டமாய் வெட்டிவிடும் வாம்பயிரை—திட்ட ம்
30 பயிரோறு நன்மணிகள் பற்றாது வீணா ம்
வயிறெரிந் தறுப்பார்கள் வைக்கோல்—துயர்பா க
31 விண்மாரி பெய்து விளைபயிரை யோம்பா து
மண்மாரி பெய்து மரைத்துவிடும்—பண்பா ய்
32 பருவப்பயிர்களுமே பாழாகும் மீட்டு ம்
வருபயிறு மற்ப வரவே—திருந் த

33 உளைத்த குடிகளதை யுண்பாருக்கேய்ந் து
களைத்து விழுவார்கள் காலம்—நிலவரமா ய்
34 பட்டணங்க டோறும் பசிநோய் மிகுத்து வரு ம்
வட்டியனியாயமதாய் வாங்கிடுவோர்—இட்டமுட ன்
35 தஞ்சமென வைத்தசொத்தைத் தாமேயபகரித் து
வஞ்சனைசெய் மூடரோ வாழ்ந்துவப்பார்—நெஞ்சா ற
36 பிள்ளையுடன் கொண்டபெண்டை பேதமாய் விற்றிடுவா ர்
தெள்ளெழிலார் கன்னிச் சிறைவிற்பார்—கள்ளமா ய்
37 தாய்க்கு மகன் றூது தந்தைக்குப் புத்திரியு ம்
சேய்தனக்குத் தாய்தூதுஞ் சென்றிடுவார்—தேயமதி ல்
38 மாலையிடாப் புத்திரிக்கு மாப்பிள்ளையைத் தேடிவைப்பா ள்
சூலுதியா மாற்கமுந்தாய் சொல்லுவாள்—காலமதி ல்
39 தந்தையுந் தனையனுமோர் தாரத்தி லேசுகித் து
மைந்தனைப் பெற்றெடுப்பார் மண்ணேச—விந்தையா ய்
40 சூதுவினையுங் கபடுஞ் சேராமுதற் பொய்யா ன
சாதனங்கள் பத்திரங்கள் தான்பெருகும்—வாதுட னே
41 மாதர்கள் மோகமதி மயக்க மிஞ்சி யே
காதலனை முற்றாய்க் கருதார்கள்—பேதலித் து
42 ஞானமது தப்பிவெறி நாய்போற் சினந்துகற் ப
ஊனைக் கொலைபுரிவார் ஒவ்வாமல்—ஈன த்
43 திருட்டுங் கொலைபகையும் தீமையெலாமீ றி
பிரட்டுருட்டாய் வீம்புமொழி பேசி—மருட்டி யே
44 எந்தன் கடன் பணத்தை யிப்போதி யென்றலட் டி
சிந்தை கலங்கவசை செப்புவார்—நிந்தையுள் ள
45 பொய்யாணை யிட்டிடுவார் பொய்ச்சத்தியம் படிப்பா ர்
மெய்யோனுக்கஞ்சாத வீணாணை—செய்வார்க ள்
46 காசினியை யாளரசர் கைக்கூலி யாசையினா ற்
பேசிடுவார் ஞாயம் பிசகாக—நேசமுள் ள

47 படியரசு முற்றிலுமே பாழாகும் பூவி ல்
குடியரசு மேலாகக்கூடும்—உடன் பிறந் த
48 அண்ணனுக்குத் தம்பிபகை அன்னையர்க்குப் பிள்ளைப கை
கண்ணிற் சிறந்த பெண்டீர் காயந்திடரப்—பெண்கொடியா ர்
49 நாணுகொள்வார் நஞ்சுதின்பார் நாக்கைப்பிடுங்கிடுவா ர்
கேணிகளில் வீழ்ந்திறந்து கேடுறுவார்—ஆணவமா ய்
50 ஆற்றில் மடிவாரும் அக்கினியில் வீழ்வாரு ம்
தாற்றினாற்குத் துண்டு சாவாரும்—தோற்ற வே
51 பூலோகமெல்லாம் புரைபிணியுமுண்டாகு ம்
ஆலவிஷக்காற்றால் ஆர்ந்திருப்பார்—மேலா க
52 வெய்யோன் மிகவெதுப்ப வெவ்வரவுஞ் செந்தேளு ம்
செய்யான் முதலான செந்துகளால்—நைவார்க ள்
53 நாளுக்கு நாளாய் நடக்கும் வழிகுருகு ம்
கோளுங்கதிமாறிக் கோணிவிடும்—நீள்புவி யை
54 ஆளுமரசர் அரசிளந்து தட்டளிவா ர்
நாளுமே பூமி நடுங்கிவரும்—தாழுற் று
55 மேல்புறத்துப் புன்செய் விளையுமதற்கடுத் தி
கீழ்புறத்து நன்செய்பலன் கிட்டாது—மேலு ம்
56 அறிவுமயக்கமதால் அண்ணனுடன்றங் கை
முறைகெட்டுத் தங்களில் மோகம்—பெருகி யே
57 தாயுமகனுஞ் சரசுமிக வேபே சி
ஞாயமது பாராமல் நத்தியே—நேயமுட ன்
58 சிற்றின்பத் தீதனைச் செய்திடுவார் கூசாம ல்
அத்தனுக் கஞ்சார்கள் அம்புவியில்—நித்தநித்த ம்
59 பெண்டுகள் மெத்தப் பெருகி மதத்தா லே
கண்டவனைக்கூடிக் கல்வி செய்வார்—மண்டலத்தி ல்
60 தாயும் தகப்பனுமே தங்கருவழித்திடுவா ர்
சேயர்களை யீடுவைத்துச் சீவிப்பார்—தேயமதி ல்

61 முன்னாலே பெண்ணுருவ முக்கோண மாய்க்குழந் தை
பின்னாலே யாண்போற் பிறந்துவிடும்—இன்னமு மே
62 ஆண்பிள்ளை யென்ன அறியவரி தாய்பிறக்கு ம்
ஆண்மீசை பெண்ணுக் கமைந்திடுமே—ஆண்டனுக் கு
63 மீசையரும்பாமல் மெய்யுங் குரிக்கரிதா ம்
தேசந்தோறு மிவையே சேர்ந்துவரும்—காசினியி ல்
64 ஆண்பெண்ணுருவற் றலிப்பிள்ளை யேபிறக்கு ம்
காணரிதா யின்னுங் கனதிரிபாங்—தோணுகின் ற
65 கோழிமுட்டை யொன்றினிலே குஞ்சிரண்டு மூன்றாகு ம்
கோழியாஞ் சாவலைப்போற் கூவுமே—வாழு ம்
66 ஒரு சூலில் மாள்வதெல்லா மோயாது வாழ்ந் து
இரு சூலு முச்சூலு மீனும்—அருமையதா ய்
67 ஆடுபோல் மாடுகளும் ஆனை குதிரை சிங்க ம்
போடுமே குட்டிரண்டு போதொன்றில்—நாடுதனி ல்
68 ஒற்றைத்தூ ருள்ளமரம் ஓங்கிவளர்ந்ததி லே
பற்றும் பலகிளைகள் பாங்குடனே ஒற்றுமையா ய்
69 தேங்காயிரண்டு கொட்டை சேர்ந்திருக்குங் காசினியி ல்
மாங்காயு மவ்விதமே மாறுபடும்—ஆங்கால ம்
70 கோழியிடுமுட்டையிலே கொம்பிரண்டிசைந்திருக்கு ம்
மீளவுமோர் வாலிருக்கும் மேலோட்டில்—தாழ்வா க
71 கொண்டவன்றன் பத்தினிக்குக் கூட்டிவைப்பான் மாப்பிள்ளையை
கொண்டவளு மவ்விதமே கோதுசெய்வாள்—மண்டலத்தி ல்
72 பெண்சாதி வீற்றிருக்கப் பின்னொருபெண் மன்றல் செய்வா ர்
மண்ணோரிசைந்திருப்பார் வாழ்கவெனத்—திண்ணமுட ன்
73 காசுபண வாசையினாற் காதலியை யீடுவைப்பா ர்
நீசவியா பாரமுமே நீளிக்கும்—பாசமுட ன்
74 மாதர்கள்மோக மதிமயக்க மீறியேதா ன்
சாதிவிகற்ப மற்றுச் சஞ்சரிப்பார்—நீதியற் று

75 வெள்ளத்தி னூற்சிலவூர் மீளாமற் பாழாகும்
விள்ளுமிடி யாற்சிலவூர் வெந்தளியும்—பள்ளமென
76 தாழுஞ் சிலவூர் சமுத்திரம்வந் தேபெருகும்
வாழுஞ் சிலவூர் மகிழ்ச்சியுடன் ஊழ்வினையால்
77 மறுதாரங்கொள்ளவென மங்கிலியைச் சாகடித்து
முறையில்லா மன்றல் செய்வார் மோகமுடன்—தனையதனில்
78 மண்மாரி பெய்துவிடும் மானிலத்தி லாங்காங்கு
திண்மையுள்ள வேந்தருமே சீர்மாரிப் புண்ணுவார்
79 பெண்ணொருத்தி யைந்தாறு பேர்புருட னாத்தொடுவாள்
கண்காண ஆண்பெண் கலவிசெய்வார்—மண்மீது
80 கொண்டவனைத்தானே கொலைபுரிவாளப்போது
கண்டவனைத்தானே கணவனென்பாள்—மண்டலத்தில்
81 மானிடர்கள் வர்த்தனையாம் மானிலஞ் சுருங்கிவரும்
தானியப் பலன் குறைவாய்த் தான்விளையும்—ஞானமதால்
82 தண்ணீர்மேல் வண்டிகளாற் சவ்வாரி செய்வரன்றி
மண்மீதிற் கப்பல் வரவழைப்பார்—உண்மையதாய்
83 மாடு குதிரை மற்றும் வாகனங்களில்லாமல்
ஓடுமே வண்டிரதம் உச்சிதமாய்—நாடெனவே
84 உண்டுபண்ணிவைத்த ஒருபொருளைத் தேடாது
கண்டதெலாந் தெய்வமெனக் கையெடுப்பார்—சண்டாளர்
85 பேயும் பெருங்குரங்கும் பித்தனையுந் தோத்தரிப்பார்
ஆயுமெய்த் தேவனிலையாய்ந்தறியார்—தீயகுண
86 நஞ்சுடனே பேயாலும் நாடுமருந்தாலும்
துஞ்சையிலும் பில்லி சூனியத்தா—லுஞ்சீரி
87 கொன்றிடுவார் பாவக் கொடுமைதனையுணரார்
பன்றிபோற்றின்றுபகை பாராட்டி—நன்றிகெட
88 தீவைப்பார் வீடுகளில் தின்மைமிகக் கப்பலிலே
பாயறுத்துப் பொல்லா பகைமுடிப்பார்—தேயமதில்

89 பேயினால் நன்மை தின்மை பேறுபெறக் கூடுமென த்
தீயவுறுவென்றியறஞ் செய்திடுவார்—காயமதி ல்
90 சின்னஞ் சிறுவருக்குச் சிற்றின்பந் தோன்றி யே
மன்னுகபடானபல வார்த்தைசொல்லும்—இன்னமு மே
91 தாய்தகப்பனைக்கொடியர் சண்டாளஞ் செய்திடுவா ர்
சேய்கழுத்தைத் தாய்முறித்துச் சேமிப்பாள் தாய் தகப்ப ன்
92 சிற்றின்ப வார்த்தைகளைச் சேயருக்குச் சொல்லிவைத் து
கற்றுக்கொடுப்பார்கள் காமவழி – முற்றிலு மே
93 நாயகன்மேற் பாசமின்றி நஞ்சுவைத்துக் கொன்று மறு
நாயகனை மன்றல்செய்வார் நங்கையரும்—தேயமதி ல்
94 பெற்றோரை மற்றவனைப் பேதலித்துத் தன்மனம்போ ல்
பத்தாவை மன்றல்செய்வார் பாவையரும்—உற்றப டி
95 பாவமினிப்பாகும் பற்றுவைப்பார் தீமைதனி ல்
காவலுறும் புண்ணியங் கசப்பாகும்—மே வி
96 ஒருத்தனுடன்பிறகே ஒன்பதெட்டுப்பெண்க ள்
திருத்தமுடனே திரிவார் தேடியே—கருத்தா க
97 தாய் தகப்பன் நன்னெறியைத் தாங்கடந்து நல்வழியி ல்
சேய்நடக்கப் புத்தியது செப்பார்கள்—பேய்பிடித் து
98 பெற்றவரைப் பிள்ளைகளும் பிச்சையெடுத்துண்ணவைப்பா ர்
மற்று மயிர்பிடிப்பார் மண்ணிகழ—உற்றப டி
99 வேதகலகமுண்டாய் வேதமொழி யைப்பிறட் டி
வேதம் பலவாய் விதித்திடுவார்—தீதா ய்
100 ஜனங்கள் வளர்ச்சி குன்றும் சாதாரணத்தி ல்
ஜனங்களுக்காயுசுநாள் தாழும்—பனைமேவு ம்
101 கள்ளச்சிறுகருங்கட் காக்கையின்முட்டையி லே
வெள்ளைக்காக்கைபொறிக்கு மேனியெல்லாம்—வெள்ளையா ம்
102 கொக்குக் குருகுடனே கூடிப்புணர்ந்திட வே
கொக்குக் கிரண்டுநிறங் கூடிவரும்—அக்கினிசே ர்

103 சூரியனுங் கிட்டத் தொடுத்துமிகக் காய்ந்துவிடு ம்
ஊரதிலே பிள்ளைகள்பல் லோடுதிக்கும்—சூரியனி ன்

104 வெய்யிலுரமதனுல் மேறுவெடித் துப்பிளந் து
பொய்யரவே மோதிப் பொடியாகும்—வையகத்தி ல்

105 நெய்யாய் தீபமற்று நீராலே தீபவ கை
கையாடுவார் நரர்கள் கற்பனையால் –மெய்யா க

106 அம்மி மிதக்கவைப்பார் ஆகாயமார்க்கமதி ற்
செம்மையுடன் நேரதனைச் செல்லவைப்பார்—கம்மியரு ம்

107 வாரிகடல்பொங்கி வரம்பனையைத் தாண்டுவதா ல்
சீரின்றிப் பூமி திடலாகும்—பாரினி லே

108 நாளொன்றிக் கோழி நயந்திரண் மூன்றுமுட் டை
மாளாமலிட்டுமறு நாட்பொறிக்கும்—மீளவு மே

109 மூன்றுதலை மூன்றுசிறை முக்காலுமேகூ டி
தாண்டுசேவற்குஞ்சு தான்பொறிக்கும்—நீண்டவி ழி

110 டெண்கள் வயிற்றினிலே பேய் மிருகம் போற்பிறக்கு ம்
பெண்கள் பெருநாட்பிசகியொரு—வன்பேரி ல்

111 அஞ்சுபிள்ளை யாறுபிள்ளை ஆகடியமாய்ப்பிறக்கு ம்
வஞ்சியர்கள் பிள்ளையதால் மாய்வார்கள்—மிஞ்சியேதா ன்

112 நாலுமுகமாறுமுகம் நாடியே வேறுறுப்பு ந்
தோலெலும்பு மர்ய்க்குழந்தை தோன்றிவிடும்—வாலுடை ய

113 மாட்டுடனே யாட்டு வயிற்றினிலு மானிடன்போ ல்
வாட்டமறவேபிறந்து மாண்டுவிடும் நாட்டினி லே

114 முன்னொருவன் கொண்டபெண்ணை மோகித்துபின்னொருவன்
நன்னயமதாயெடுக்க நாடுவான்—வின்னமதா ய்

115 நாட்டுக்கிராசாங்கம் நாலிரண்டு மூன்றுகு ம்
வீட்டுக்கோர் நாட்டாமை மேவிடுமே—நாட்டுக்கு ள்

116 பெண்களுக்கு ஆண்வலியும் பேரறிவு முண்டாகு ம்
ஆண்களுக்குப் பெண்ணறிவு மவ்வியல்புந்—தோன்று மே

117 அள்ளற்றிரைகடலில் ஆர்வளங்கள் தான்குறைந் து
அல்லார்மலையும் அசையுமே—தள்ளிவிழு ம்
118 மீனுக்குக்காலுமுண்டாம் மேவுமத்திப் பூத்தோன்று ம்
கான்கதலித் தார்வெப்பக்காய்க்குமே—ஊனுடை ய
119 மாட்குக்காலதிக மாய்த்தலையு மாறிவிடு ம்
ஆட்டுக்கு மப்படியே ஆகுமே—காட்டிலுறு ம்
120 கத்திரிக்காய் பூசனியில் காய்க்கும் பூர்வமா ய்
கத்திரியில் வேறுவிதம் காய்க்குமே—சித்திரமா ய்
121 பாம்பு மெலிக்குப் பயப்படுமே கீறியின ம்
பாம்புக்கே யஞ்சிப் பயந்தடங்கும்—வீம்பா ன
122 நாயைமுயல்மிரட்டும் நாதனே பேடெதிர்த் த
பேயும் பயந்தோடும் பெண்கொடுமை—ஆயுங்கா ல்
123 ஆனையும் பூனையைக்கண் டஞ்சுமேயக்கால ம்
தேனுங்கசப்பாகுஞ் செகதலர்க்கு—ஈனமில் லா
124 வாழமிருகஞ்சால மருண்டஞ்சி யோடுங்கு ங்
கீழ்மிருக மேலாய்க் கெலிக்குமே—தாழாம ல்
125 நாட்டிலுள்ள சீவசெந்து நாய்புலிகட் கஞ்சா து
காட்டில் நடமாடுங் காலமது—கோட்டமா ய்
126 நட்சத்திரங்களுமே நன்பகலிலேதோன்று ம்
நட்சத்திரங்கோட்டை நண்ணுமே—உச்சிதமா ய்
127 முப்பதுநாள் நாற்பதுநாள் மூடி மழைபொழியு ம்
செப்பரிய வல்விருளுஞ் சேர்ந்துறமுங்—கப்பி யே
128 காட்டின் மிருகங்கடைதடங்கள் தோன்றும ல்
நாட்டில் மருவி நடமாடுங்—கூட்டமா ய்
129 வெள்ளைநரி வெண்கரடி வெண்குரங்கு செங்கரியு ம்
வெள்ளைமயில் வெண்புலியுமேவிவரும்—உள்ளப டி
130 வெள்ளைப்பருத்தியிலே மேவுங் கரும்பருத் தி
வெள்ளரும்பு செவ்வலராய் வேறுபடும்—விள்ளறி ய

131 மைபோற் கருத்தமயிர் மாறிவெண்ணிறமாய் த்
துய்யகுழந்தைகட்குத் தோன்றுமே—மெய்யொருங்கு ம்

132 ஆட்டின் வயிரதனில் ஆனைபன்றியுங்குரங்கு ம்
மாட்டினிலே சிங்கமது வாய்ப்பிறக்கும்—நாட்டிலேதா ன்

133 கோழிமுட்டை நாற்கோணம் கொள்ளுங்கருநிறமா ய்
சூழமயிர்நெருங்கத் தோன்றிநிற்கும்—நீள்புவியி ல்

134 வாலுடனே பிள்ளை வகைவகையதாய்ப்பிறக்கு ம்
தோலுடனே நீண்டமயிர் தோன்றிநிற்கும்—காலுடன் கை

135 இல்லாதபிள்ளை இடர்முண்டமாய்ப்பிறக்கு ம்
சொல்லாற்சிரித்துவிடும் சூதறவே—தொல்லுலகி ல்

136 வயிறு முதுகிடத்து வாழும் முதுகு ம்
வயிற்றிடத்துத் தோன்றும் வாரும்—கயலென் ற

137 கண்ணிருக்கு மேற்றலையிற் காணச்சடையிருக்கு ம்
வண்ணமறவேபிறகே வாய்காணுந்—திண்ணமதா ய்

138 ஓர்கண்ணு மோர்காலு மோர்செவியு மோர்கரமு ம்
நேர்மாறிப் பெற்றிடுவார் நேரிளையார்—பாரி ல்

139 கடைவாயிற் சிங்கப்பல் காணவருஞ் சேய்க்கு த்
தடமார்பிற் பெண்கொங்கைசாரும்—படந்தாழு ம்

140 பாம்பதுபோலேபிறந்த பார்மீதிலேயூர்ந் து
சாம்பிள்ளை வெத்தவிந்தத் தன்மையதாய்—ஆம்புவியி ல்

141 ஆனைதனைப்பூனைமா வாகடிய மேபுரியு ம்
பூனையுட னேயெலிவெம் போர்பொருதும்—மானனையா ர்

142 அஞ்சுவய தாறுவய தாகுமுன்ன ரேசமைந் து
கொஞ்சவயதிற் கருப்பங் கொள்ளுவார்—மிஞ்சிவெ கு

143 குட்டிமிருகங் குறையின்றிக் கன்றீனு ம்
இட்டபயிர் சீக்கிரத்தி லேவிளையும்—கிட்டியகா ல்

144 வானஞ்சுருங்கிவரும் வாம்பயிர்கள் குன்றிவிடு ம்
தானதவங்குறையுந் தார்தலத்தில்—மானிடர்க ள்

145 காசுபண மேராளங் கையாடு வாரொனினு ம்
தேசமதிற்றானியங்கள் சிக்காது—மீசுரமா ய்
146 காய்கனி கிளங்குகளை காய்ந்த சருகுக ளை
நாய்குரங்கு பாம்பையுமே நண்ணுவார்—காயமுள் ள
147 மனுஷர் மனுஷரைத்தான் மாபசியாற் றின்பார்க ள்
மனுஷர்தம் புத்தியது மாறும்—உணவா க
148 கட்டங்க ளத்தனையுங் கண்காண உண்டுவைப்பா ர்
அட்டதிக்கிலும்பசிமே லாடிவரும்—முட் ட
149 அழியுநாட்கிட்ட அடுக்கையிலே யெல்லா ம்
சுழி போலமாறிச் சுருங்கி – இழிவாகு ம்
150 காணுவதிசயங்கள் காணுமே காசினியி ல்
தோணுதெல் லாமிகுதி தோணுமே—நாணுட னே
151 வேதம் பெருகும் விசுவாசந் தத்தளிக்கு ம்
வேதமதில் ஞானியர்கள் மெத்தவுண்டாம்—ஆதனாயி ல்
152 அஞ்ஞானதேசமதி லுழலு மானிடர்க் கு
அஞ்ஞானமாய்கை யகன்றுவரும்—இஞ்ஞா ல
153 சாஸ்திரங்கள் பொய்யென்று தாமறிவார் மெய்ப்பொரு ளை
தோத்தரிக்க நல்லறிவு தோன்றிவரும்—தாத்திரியி ல்
154 வேதம் பெருக விளையுமே சண்டையினு ல்
தீதில் வெகுமாந்தர் செத்திடுவார்—நீதமுள் ள
155 வெள்ளைநிறமனிதர் வேறூர்தனினின் று
வெள்ளமெனத் திரண்டு வேவுவார்—விள்ளு ங்
156 கருத்தமனிதரவர் கைக்குடயிற் றான்படுவா ர்
திருத்தமுடன்பாஷை தெளிந்தே—பொருத்தமுள் ள
157 சாதியொன்றாஞ் சருவேஸ்பரனுடை ய
வேதமுமொன்றாய் விளங்குமே—தீதணு கா
158 சற்குருக் களையெதிர்க்குஞ் சண்டாளர் தோற்றிடுவா ர்
தற்குருக் களைமிகுதி தோத்தரிப்பார்—நற்கரு ணை

159 வேதமறிந்தவரோ மெய்க்குருமார் செய்கையி லே
பாதகங்களைக்கூறிப் பளித்திடுவார்—ஆதனாயி ல்

160 காசுபணக்காரர் காரணக் குருக்களை யே
நீசமன ஆணுவராய் நிந்திப்பார்—பேசரி ய

161 சத்தியவேதத்தரசர் தான்சேனை யெங்கணு மே
அத்தன்செயலாலே யாள்வார்கள்—நித்தியமு ம்

162 காரணமாமெய்யங் கடவுளருள் வேதம து
பேரணியதாகப் பெருகியபின்—தீரமுட ன்

163 பாதிஜனங்கள் பத்திவைப்பா ராண்டவர்மே ற்
பாதிமனுவோர் பத்தியின்றிப்—பேதித் து

164 சத்தியவேதத்தினுள்ளே தானேபிரிவினையு ம்
மெத்தவிரோதஞ் செனித்து மேவிவரும்—எத்திசையு ம்

165 உண்டாக்குந்தெய்வ மொருவருமேயில்லையென்று ஞ்
சண்டாளர்மேலாய்த் தலையெடுப்பார் மண்டலத்தி ல்

166 பாப்புஞானராஜாங்கம் பங்கமுற வாதா டி
பாப்புஞானராஜாங்கம் பங்கிடுவார் மூப்பா க

167 ஓர்தகப்பன்பிள்ளையென்று உட்பட்சம் வைத்தோர்க ள்
சீர்கெடப் பேதங்கள் செப்பிடுவார்—பாரி ல்

168 குருக்களுக்குள்ளாகக் கோடிபகையா ம்
குருபுத்திகேளார் கொடியோர்—குருவா ல்

169 சிலபேர்கள் கெட்டழிவார் தெய்வமறை யை
மலைவுறவே பொய்யிசைத்து மாற்றிச்—சிலைமீ தி

170 தற்பரமுன்றந்தமறை தானிதுவே சீர்திருத்து ம்
நற்பெரியபோதகர்யாம் நம்புமென்றே—அற்பர்க ள்

171 போதிக்குந் துன்மார்க்கப் போதனைகட்கேயிசைந் தி
தீதுற்றமூடருப தேசிகளாய்—வீதிகளி ல்

172 பேய்களைப்போற்றந்திரமாய்ப் பேசிவயிறைவளக்க த்
தீயசனங்களதிற் சேருவார்—தேயமதி ல்

173 உப்புக்கடல்நீரை யுண்சலமாய் மாற்றிடுவா ர்
கற்பனையாயமர ரியிடிகாணவைப்பார்—அப்பா ல்
174 வடமுனையில் தென்முனையில் மானிடர்கள்சேர்ந் து
குடியேறி வாழ்வார்கள் கொஞ்சந்—தடமதனி ல்
175 மண்வயிற்றுள் மாநகரும் மாந்தரதி லேவசிப்பா ர்
விண்ணொளியைக் காணாதார் மெத்தவுண்டு—திண்ணமுட ன்
176 பூமிமுனையோர் பேசப்பூமியெல்லை யோர்கேட்டு த்
தாமதியா தககணஞ்சம் பாஷிப்பார்—பூமுகத் தி
177 புத்திசாமார்த்தியத்தால் பொம்மைகளைப் பேசவைப்பா ர்
சித்திரமாய் நாட்டியமுஞ் செய்துவைப்பார்—இத்தரையி ல்
178 நாளுக்கு நாளாய் நவமான சூட்சியைப் பூ
கோளமதிற் கண்டறிந்து கொந்தளிப்பார்—பாழாகு ம்
179 அல்லலுறுங்காலத் தடுத்துவரு நூதனத்தை ச்
சொல்லிடவுநாவுளதோ தொல்லுலகில்—புல்லறிவா ல்
180 இந்தவிதமாக விருக்குமந்த நாளையி லே
அந்தக்கிறீஸ்தென்றோ ரநியாயச்—சிந்தையுள்ளா ன்
181 பாபிலோனென்ற பெரும் பட்டண வாசமதி ல்
சாபிக்கப்பட்டயூதர் சந்ததியில்—பாபியிவ ன்
182 காரிருள்யாமத்துதிப்பான் காலைப்போ தொப்பாக ச்
சூரியனுந்தோன்றுமெனச் சொல்லுகின்றார்—ஆரியர்க ள்
183 பாலப்பிராயமதிற் பார்ப்போர்களச்சமுற் க
கோலக்கொடுமைகளிற் கொந்தளிப்பான்—மேலுமிந்த ப்
184 பலதிசைகடந்து பஞ்சமாபாதகனா ய்
வாலவயதிலே பேர் வாங்குவான்—தாலமதி ற்
185 அக்கிரம மத்தனைக்கும் ஆதினனாயிருப்பா ன்
எக்கொடுமைக் குங்கலங்கா ஏடாளன்—மிக்கா ன
186 சாஸ்திரங்களத்தனைக்கும் தங்குமிருப்பிடமா ய்ச்
சூஸ்திரங்களிற்கதித்த துந்துமியராய்—நாஸ்திகனா ய்

187 சாஸ்திரிகள் காப்பியத்திற் றப்பறைகளைப் பிடிப்பா ன்
தாத்திரியில் வாக்குவல்லதற்செருக்கன்—நேத்திரத்தி ல்
188 அங்கமதிற் காத்திரனாயாணவத்தில் ராட்சதனா ய்
எங்கும் பயங்கரனாயீடிலனாய்—மங்கா த
189 கீர்த்திபெற்ற வீரியனைக் கீழடக்கியாண் டொடுக் கி
ஆர்க்குமேலாயிருப்பான் ஆனதனால்—ஏற்கையதா ய்
190 திட்டசகவாசத் தோழர்களைச் சேகரித் து
அட்டதிக்கிலுங்கெவிகொண் டாட்டிவைப்பான்—சட்டமதாய்
191 பட்டணங் களைக்கொளுத்திப் பாழாக்கி மானிட ரை
வெட்டித் தலையறுப்பான் வீம்புடனே—நட்டமின் றி
192 கொள்ளையடித்துக் குவித்திடுவானாஸ்திக ளை
வெள்ளமென ராணுவத்தை வீணாக்கி—உள்ளப டி
193 காலமெல்லாம் ரத்தக்களரியிலே வீற்றிருப்பா ன்
ஆலமுண்ட நெஞ்சகத்தி லாவலுற்று—நீலனெ ன
194 இப்புவியிலேவளர்ந் தெல்லாக் கொடுமையுட ன்
முப்பதாமாண்டில் முடிதரித்து—அப்பா ல்
195 சிங்காசனத்தைச் செருசலையிலேயமைத்து ச்
செங்குருதிக் கோலேந்திச் சீறளிப்பான்—துங்கனெ ன
196 மூன்றரையாண்டளவு முற்றுமுலகாண்டிருப்பா ன்
மூன்றரையாண்டு முழுப்பஞ்சம்—தோன்றுகையி ல்
197 பேய்களெல்லாங்கூடிப் பேசுகிறனாயவ கை
நேயமுடன்சொல்வேன் நினைவாகக்கேள்—தீயகத்தி ற்
198 கட்டிவைத்த யேகபரன் கட்டவிழ்த்துத்தீநர கை
விட்டுலகில்வைத்ததுவே மேலாகுந்—திட்டமுட ன்
199 பூமியைக்கெடுப்பதென்ற பூர்வீகநஞ்சபத ம்
தாமதியா மல்முடிக்கச் சந்தியிது—ஆமிதற் கு
200 நம்முடையமூத்தமகன் நாஸ்திகர்க்குநாஸ்திகனா ய்
சிம்மாசனத்தூர்ந்தான் தீரமுள்ள—சம்மதியா ய்

201 சாஸ்திரிகள்சொன்னபடி சர்வேசனில்லையென் ற
நாஸ்திகருமேராள நாமறிவோங்—தோத்திரஞ்சே ர்
202 சத்தியவேதமென்றாற் றாரணியெலாமாச் சு
நித்தியமு நம்மையார் நேசிப்பார்—இத்தருண ம்
203 பாப்புவுக்குமேலாய்ப் பராபரன்று னென்றிருக்க ப்
பாப்புவையும்பூமி பகைத்ததினி—மூப்பா ன
204 ரோமரிராச்சியமும் நேராமானுவென்றசொல்லு ம்
பூமிமுடிவுக்கொளிந்து போகுமென்றார்—ஆமீதுண் மை
205 இந்தவடையாளமெல்லா மேற்கனவேகண்டறிந்தோ ம்
அந்தியகாட்பூமிக்கடுத்ததனாற்—சந்தடியி ல்
206 அந்திக்கிறிஸ்தா மருமைமகன்நெஞ்சகத்தி ல்
நந்தமர்களோடொன்றி நாமிருந்து—தந்திரமா ய்
207 நாணுகின்ற மானிடரை நாமேகெடுத்துவி ட
வேணுமென்றயோசனையால் வேகமுடன்—நாணமி லா
208 அந்திக்கிறிஸ்தின் அருகேபோய்ச்சேர்ந்ததனு ல்
புந்தியிலான்செய்யும் புதுமைகேள்—தந்திரமா ய்
209 பில்லியஞ்சூனியமும் பேய்மாயமும்பிரட்டு ம்
சல்லியமு மொட்டியமுஞ் சாலங்கள்—சொல்லுகின் ற
210 ஏவலிற்றேர்ந்தின்பாய் ஏறிவருவான்பேய்மே ல்
ஆவலுடன்பன்றிபோ லாகிடுவான்—சேவலுட ன்
211 பூனைபோல் நாய்போல் புகலுகின்ற சிங்கம்போ ல்
ஆனைபோல்ரூப மவனெடுப்பான்—மானைப்போ ல்
212 பாய்வான் வெகுதூரம் பட்சிகள்போ லேபறப்பா ன்
தோய்வான் நெருப்பிற்சுழன் றெழுவான்—பேயதனு ல்
213 வெட்டணுவித்தை விளைப்பானிரும்புதனை க்
கட்டுமறமாயங்கள் காட்டுவான்—வட்டமா ங்
214 கார்கடசலின் மேல்நடப்பான் காணுதொளிந்திடுவா ன்
தோர்வையற வப்பால் தோன்றுவான்—வாரளக ப்

215 பெண்டாக வெல்லாப் பெரியோனை யேயடக்கி ச்
சண்டாளனான சதிபாவி—கொண்டாடு ம்
216 நான்சருவ யீசனென நாடோரொங்குஞ் சொல்லிடுவா ன்
வான்புவியை யுண்டுபண்ணி வைத்தனென்பான்—மீனுலவு ம்
217 மாகந்தனிலிருந்து வந்தேனா னுங்களுக் கு
ஏகபரன் வேறேயா ரில்லையென்பான்—ஆகையினா ல்
218 மாண்டவனைப்போல் நடித்து மானிடர்முன் மூன்றாநா ள்
மீண்டு முயிர்ப்பவனாய் வித்தைசெய்வான்—ஆண்டவனா ன்
219 என்னை வணங்கிடுங்கள் என்பாத நம்பிடுங்க ள்
தன்னிகரில்லானான் றானென்பான்—பொன்னுல க
220 மோக்ஷந்தருவேனென்று மெய்போல் மொழிந்துபர ன்
ஆச்சரியந்தேறா வரும்பாவி—கூச்சமற்று க்
221 கும்பிட்ட பேர்களைத்தான் கொல்லாமல் விட்டிடுவா ன்
கும்பிடாப் பேர்களைத்தான் கொன்றிடுவான்—வம்பிட் ட
222 வீரியத்தைக் காட்டிடுவான் மென்மேலும் புண்ணியத்தி ன்
காரியத்தைச் செய்வோரைக் காய்ந்திடுவான்—சீரியலு ம்
223 பூலோகமெல்லாம் புகழ்பெறவே யோர்குடையி ல்
நாலோகநாதனென நாள்விடுவான்—சாலவெ கு
224 பாவம் பெருகுதற்குப் பன்னாளுமார்க்கமுற் று
தேவனின் பாதாரந் தேடவொட்டான்—பாவியிவ ன்
225 குருக்களைச் சங்கரிப்பான் கோவிலையுந் தாக் கி
சுரூபங்களைத்தகர்த்துத் தூளாய்—ஒருநாளு ம்
226 வேதமெனச் சொற்காதில் வீழாது வேரறுத் தி
ஆதிபரன் நானேயென் றாங்காரி—சாதித் தி
227 ஆலயங்களிற்பூசை ஆராதனைசெ ப
மாலைகள்நடந்தேறா வாறுசெய்வான்—காலையிலு ம்
228 ஆலயத்தின் மீதேறி ஆண்டவன்கான் வேண்டுமென்பா ன்
மாலையிலுமப்படியே வாழ்த்துமென்பான்—சீலமிகு ஞ்

229 சத்திரங்கள் கோபுரங்கள் தனமாசனங்களெல்லா ம்
அத்தயனையு நின்மூல மாக்கிடுவான்—பத்தியுள் ள
230 அர்ச்சியசிஷ்டனைப்போல் அற்புதங்கள் காட்டிடுவா ன்
கற்பனையாயச் சம்மனசைக் காணவைப்பான்—தப்பில் லா
231 மெஞ்ஞான மார்க்கமதை விட்டிடைந்து நிந்தைசெய் தி
தன்ஞான மேஸ்திரமாய் ஸ்தாபிப்பான்—இஞ்ஞால ஞ்
232 சத்தியவேதந்தனைத் துச் சத்துருக்க ளாற்சகித் த
தத்தனைக்குமென்றுயருண் டாக்கிவைப்பான்—அத்தருண ம்
233 வையகத்திற் கொஞ்ச மனுடர்தலை கொடுப்பா ர்
மெய்யைவிட்டமாந்தர் மிகுதியுண்டு—ஐயமுற் று
234 எல்லாருங்கேட்டு இழிநரகிற் போவதினா ல்
வல்லவொருகர்த்தர் மனதிரங்கிச் சொல்லரி ய
235 ஆண்டவராற் பூர்வீகத் தாக்கையுடனேயெடுத் தி
மாண்டிடாதற்புதமாய் வைத்திருக்கும்—காண்டரி ய
236 ஏனோக் கெலியாசு என்றவிரு மாமுனிவ ர்
வானந்தனிலோர் மண்டலத்தில்—தானிருந் தி
237 கொடுங்கோலனானோன் குவலயத்தை முற்றா ய்
நடுங்கவதைக்கத் தொடங்கும் நாளில்—அடங்கா த
238 அந்திக்கிறிஸ்தென்ற அகங்காரியானவன்மு ன்
வந்தவர்கள் சொல்லுகின்ற வாறதுகேள்—புந்திமரு ண்ட
239 வேண்டாமகனே நீயிவ்வா றியற்றுகின்றா ய
ஆண்டவன்றன் கோபத்துக் காளாக—வேண்டாங்கே ள்
240 தீர்வைவரும்போது செத்திடுவாயுன்னுயிர்தா ன்
வேறெனவே தீநரகில் வேகுமுன்—னாருடலை ப்
241 பேய்கள்கடித்திழுக்கும் பீழைமிகுமக்கினியி ல்
ஆயுந்துணையங்கே யார்வருவார் —ஞாயமின்றி க்
242 கெட்டுவிட்டான்பின்னே கிலேசமுற்றாலென்னபல ன்
எட்டாப்பரஞ்சோதி யெம்மிறையைக் கிட்டிடுவா ய்

243 உன்னைப்படைத்துனக்கு ஊன்முதலாய்த் தந்தவொ ரு
தன்னிகரில்லான்றனைச் சாரெனவே—அன்னவர்க ள்
244 சொன்னவுடன்மாகோபஞ் சூடாகவேபெரு இ
என்னைப்படைத்த இறையவனுண்—டென்னுமு மை
245 கொன்றுடலையேபிளந்து கூறிட்டுவைத்திடுவே ன்
என்றுரைப்பானவ்விருவ ரேங்காது—விண்டரைவா ர்
246 பில்லியுஞ் சூனியமும் பேய்மாயமும்பிரட்டு ம்
எல்லாங்கடவுளர்முன் னேதாகும்—கல்லார்க ள்
247 சாமியென வுன்னிடத்தில் தான்சோறுகேட்பதினு ல்
பூமியிலே நீயே பெருந்தெய்வ—மாமென் று
248 எண்ணுதேபேய்மாய்கை என்றுநில்லா துன்சடல ம்
மண்ணுக்கிறையாக மாண்டுவிடும்—அண்ணலா ம்
249 ஆதிபரனுன்செல்வம் அத்தனையும் போக்கிடுவா ர்
நீதிக்குள்ளாவாய் நீ நிச்சயமாய்—வேதனையா ல்
250 கூவியழுதாலுங் கூளிகளைவைதாலு ம்
ஆவதென்ன போவென் றங்கிருந்த—பாவிக ளை
251 கண்டுரைப்பார் நீசப்பேய் காதகத்தை நம்பியத ன்
தொண்டரெனநீங்கள் தொழலாமோ—அண்டபிண்ட ம்
252 மேதினியெல்லாம்படைத்த மெய்யானதெய்வமென்று ல்
சூதுடனே சோறுதரச் சொல்லுமோ—வாதுட னே
253 கண்ணைக்கொடுப்பனென்று காந்தலுடன் கூறிடு மோ
கொன்றிடுவேனென்று கொலைகொள்ளுமோ—மண்ணுலகி ல்
254 தன்பசியைத்தீர்த்துவிடத் தள்ளாதபேயதுதா ன்
உன்பசியைத்தீர்க்க வுவக்குமோ—கண்கெட் ட
255 பாவிகளா நீங்கள் படுகுழியில் வீழாம ல்
தேவபரனெறியைத் தேடுங்கள்—ஆவலுட ன்
256 கண்டதெலாந் தெய்வமெனக் கையெடுக்கவேண்டாமெ ன்
றன்றெழுதிவைத்தார் அமலபரன்—கண்டறிமி ன்

257 பாருலகுந் தேவுலகும் பாதலமும் பல்லுயிரு ம்
ஓர்நொடியிலோர்மொழியா லுண்டாக்கி—நேரா ன
258 ஓர்குடைக்கீழ் மூவுலகு முள்ளடக்கியாண்டருளு ம்
சீர்நிறைந்ததேவ திருவருட்கோர்—நேருள தோ
259 தான்படைத்த மானிடர்கள் தாழ்நரகிற் போகாம ல்
வான்விட்டிறங்கி மனுவாக—வூனெடுத் து
260 சொல்வரியபோதகமும் சோகுசெய்யுந் தந்திரத் தை
வெல்லுதற்குவிஞ்சை விளக்கியபின்—புல்லருக்கா ய்
261 மன்னுசிலுவையின்மேல் மாண்டிறந்த தன்னுடலு ஞ்
செந்நீரும்போசனமாய்ச் செய்தளித்தோன்—தன்னை யே
262 தேடாமல் சீமலமுஞ் செந்நீருந் தோல்நரம்பு ம்
நாடாதநாற்றமாய் நாருடற்கூண்—தேடுதற்கு ச்
263 செத்தபின்பு தீநரகில் சேரும்புன்வஞ்சக னை
அத்தனெனவேவணங்க லாகுமோ—பித்தர்கா ள்
264 ஐயாறுதிங்கள்முற்று மானபோதகம்பகர்ந்தோ ம்
பொய்யனைதீர்நம்பாநீர் புத்தியிதே—மெய்யாகு ம்
265 என்றிவ்வா றேனுக்கெலியாசு மார்தருட ன்
சென்றியம்புபோதகத்தின் சீர்கேட்டுக்—கன்றிமி க
266 அந்திக்கிறிஸ்தாம் அரும்பாவிதன்கண்ணி ல்
செந்தீயெழச்சீறித் தீதிலனை—நிந்தனையாய் க்
267 கானத்தகர்மேல் கடுஞ்சீயம் பாய்ந்தாற்போ ல்
ஊனறியும்வாளால் உயிர்பிரிப்பான்—ஆனதன்பி ன்
268 காகநரிநாய்கழுகு கண்டருந்த ஆருமந்தட த்
தேகமடக்காதுபறை தீட்டியே—வேகமுட ன்
269 மெய்யைச்செருசலையின் வீதியிலெறிந்திடுவா ன்
ஐயமதால்மாந்தர் அடக்கார்கள்—துய்யருட ல்
270 மூன்றரைநாள்வீதியிலே மோசமின்றிநாசமின் றி
வான்றளங்கள்கரத்திருப்பார் மாக்ஷிமையாய்—நான்காநா ள்

178243

271 தேகமதைவிட்டிடைந்து சென்றிருந்த ஆத்தும மோ
யோகமுடனென்றித் துயிர்த்தெழுவார்—ஆகா ய
272 மேகமுழங்கிடவும் விண்ணதிரமண்ப தா
ஏகசனர்காண இடிமுழக்காய்—மாகமி [illegible]
273 ஏனோக்கெலியாசு என்றவிருமுத்தர்க ளோ
வானோக்கிவாருமென்றோர் வாக்கொலிக்க—சேனுல க
274 சூரியன்போற்காந்திச் சுடரிடையே அவ்விருவ ர்
ஏறிடுவாரந்தரத்தில் எல்லவர்முன்—சீரியலு ம்
275 உம்பர்கள்சூழ உயர்ந்தகிரீடந்தாங் இ
அம்பரத்திற்சேரும் அலங்காரம்—இம்பர்யா ம்
276 சொல்லமனவாக்கடங்காச் சோதியானந்தமெனு ம்
செல்வமா மோட்சஞ் சிறந்திருப்பார்—கல்லறிவா ல்
277 புத்திபுகல அன்னவரைப் பொல்லாதான் வெட்டியபி ன்
மெத்தமகிழ்வாய் விண்மறந்தே—குத்திரஞ்செ ய்
278 ஆகாசக்கோட்டையாய் அந்தரத்தி லேநிறுத் தி
மேகாசனனாக வீற்றிருப்பான்—தேகமதி ல்
279 காந்தியொளிவீசக் கதிர்முடியுஞ் செங்கோலு ம்
ஏந்திவரு வான்பேய்கள் ஏவலராய்ச் சார்ந்திருக் க
280 சொல்லரிய வல்லவனாய்த் தொல்லுலக செல்வமெது ம்
இல்லையெனப் பாக்கியனாய் எந்தலென—அல்லாம ல்
281 நினைத்தால் நினைத்தபடி நிச்சயமாய்க்கண் டு
மனப்பிரிதினைய முடிப்பான் மண்ணில்—குணுங்கினத்தா ல்
282 சந்திரனைச் சூரியனை தாரகைகளைச் செலுத் த
அந்திக்கிறிஸ்துவினு லாகாது—தந்திரத்தா ல்
283 மாரிபொழியவைப்பான் வல்லிடிகள் வீழ்கவைப்பா ன்
கூறரிய மேகமின்னல் கூட்டிவைப்பான்—பாரி ல்
284 பிறவிநோயல்லாது பின்னனுகும் நோய்க ள்
இரவின்முன் முன்பனிபோலேகும்—சரச ம்

285 கருப்பவிடர் நீக்கிக் கருத்தரிக்கும் பேயா ல்
தரித்தகுலின்னதெனச் சாற்றிக்—கிருத்திரமா ய்

286 ஓடுநீரைத்தடுப்பான் உள்ளசலத்தை மறைப்பா ன்
ஆடுபலபொருளை ஆக்கிவைப்பான்—நீடுபெரு ம்

287 தண்ணீரைக் கல்லாய்ச் சமைப்பானே அக்கினி யை
தண்ணீராகப்பருகத் தந்திடுவான்—மண்ணி ல்

288 விரைப்பான் வித்திருக்க வேறுபலன்றனை யே
அறுப்பான் கனிதவசம் அன்றே தரையதனி ல்

289 பஞ்சம் படைகளுண்டு பண்ணனுவான் நீக்கிவைப்பா ன்
நஞ்சருந்தித்துஞ்சாது நாள்விடுவான்—வஞ்சகனு ம்

290 கல்லான மாமலையைக் காணாது போக்கிடுவா ன்
அல்லாதுதானே யசைத்திடுவான்—வல்லவனு ய்த்

291 தீர்க்கத் தரிசியெனச் செப்புவான் பூவகத்தி ல்
தீர்க்கமுடன் முன்னடந்த செய்கைமுற்றும்—ஏற்கவெ ன

292 பேயின்மேலேறிப் புறப்பட்டு வான்வாழு ம்
நேய கடவுளென்று நேரில்லாத்—தூயதி ரு

293 யேசுநசரேத்தெனு மேகனுமென்று சற்று ங்
கூசாமற் சொல்லிக் கொடுமையாய்ப்—பேச த்

294 தனக்குவமையில்லாதான் றானேவவா ன
இனச்சேனைத் தலைவ னேதில்—கனமிக்கே ல்

295 அண்டமுழங்கிடவே ஆகாயத்தைக் கிழித்து க்
கொண்டுவந்திறங்கிக் குவலயத்தில்—உண்டா ன

296 ஒலிவேத்து மாமலையி னுச்சியிட மொய்த் தி
கலியனையுஞ் சேனையையுங் கண்டு—நலிவற வே

297 வெட்டியெறிந்தபின்பு வேகாமல் வெந்திட வே
மட்டிதனைப் பேயிழுத்து வாழ்நரகிற் கிட்டியபி ன்

298 சாமியென்றேயவனைச் சாஷ்டாங்கஞ் செய்தவர்க ள்
பூமியிலே நின்று புலம்புவார்—நேமிமுத ல்

299 உண்டுபண்ணிவைத்த வொருவனிவன் ருனென வே
மண்டலத்தில் நாம் வணங்கி மாமோசங்—கொண்டோ மே
300 என்றே யலறிநம தேகபர ஊைப்பணிந் து
நின்று பெரும்பாவ நிீனவொழிந்து—நன்று க
301 நின்றூர் சிலநாள் நெறிகெட்டுப் பேய்நேய ங்
கொண்டார் தவமழிந்தார் கோதுற்றூர்—நன் றி
302 மறந்தார் பகைமிகுத்து மன்னுயிரைக்கொன் று
அறமென்ற நாமம் அறியார்—வரவர வே
303 செய்யாத தீத்தொழிலும் செப்பவொண்ணுப் பாதகமு ம்
வையகத்திலெங்கு மலிவதனுல்—தெய்வகடு ங்
304 கோபமிகவாகிக் கொடும்பாவஞ்செய்தலையு ம்
பாபிகள்மேலேசுமந்து பாருலகம்—மூவதுநா ள்
305 வானங்குலுங்க மண்டலமெ லாங்கலங் க
மோனருமே கண்டுபெரு மூச்செறிவார்—ஆனுலு ம்
306 சந்திரனுஞ் சூரியனுந் தாரகையும் ராசிகளு ம்
அந்தரத்தில் நீதிதப்பி ஆடிநிற்கும்—அந்தமி க
307 கன்மாரி மண்மாரி கார்கரி சாம்பலுட ன்
விண்மாரியாய் நிலத்தில் வீழ்குமே—மண்ணிலத்தி ல்
308 ஆதவ்னின் வெப்பத்தால் லாங்காங்கு தீயெறியு ம்
பூதலர்கள் கண்டு புலம்பிடுவார்—தீதா ய்
309 அடிக்கடி பூமி அதிர்ச்சியடியு ம்
நடுநடுக்கமுங்கண்டு நாணும்—தடங்கா ண்
310 பருவதங்கள் மண்ணுள்ப் பதுங்கி மறைந் து
பெருகுங் கடலதிலே பேதம்—திறமுட னே
311 மண்வெடித் தேயாங்காங் மண்டியழல் நீர் பரவ க்
கண்கலங்கி மாந்தர் கலங்கிடுவார்—விண்ணதி லே
312 காந்தியொளிவீசிக் கதிர்பரப்பு சூரியனு ம்
சாந்தகமாய் மங்கியொளி தான்கருகும் பாந்தமிகு ம்

313 வெண்பிரபை தன்னழகும் வேறுபட்டுச் சீர்கெட்டு த்
தன்னெழிலுஞ் செங்கிரமாய்த் தானுலவும்—பின்னையு மே
314 ஆகாயங் கேடுகெட்டே அந்தரமெலாஞ் சிவங் தி
ஏகாதிரத்தவர்ணம் என்றழற்றும்—பாகா க
315 வானே தகர்ந்திடிந்த வாறதுபோல் விண்புதைந் த
மீனே பொலபொலென விண்டுதிரும்—மாநிலத்தி ல்
316 ஆழியபடி நீரலைகள் ஆகாயமண்டலத்தி ன்
சூழியிடஞ் சேரச் சுழன்றெழுகும்—தாழ்வா ன
317 சாகரக்கரைபுரண்ட தண்ணீர்சினந்து பொங் க
சேகர நிலத்தை மண்ணால் சேமிக்கும்—மாக்னலு ம்
318 ஆருந்தி வாமுடிவாய் அம்புவியெலா நெருப்பா ல்
நீருமென்றுரியர்கள் நிச்சயிப்பார்—கூறியநா ள்
319 நேரிட்டு வட்ட நெடுங் கடலும் வற்றுமன் றி
யேறிநதி யெங்குநீ ரில்லாமல்—பாரி ல்
320 புகையெங்கு மண்டியண்டம் பூவுலகின் மேல்வீழு ம்
வகைவான் முழங்க மலையதிரப்—பகையா ய்
321 அக்கினிமாரி யகில மெலாம் பெய்திட வே
நெக்குவிட்டுப் பூமி நெருப்பாகித்—திக்குகளி ல்
322 நீங்காத கன்மலையு நேர்மெழுகு போலுருகு ம்
வாங்காம லேசொரியும் வன்னியது—ஓங்க வே
323 தீயாறுயோடிவிடும் தேர்கோவில் கோபுரமு ம்
சாயரக்கற் கோட்டைகளுந் தானெறிய ஆயழலா ல்
324 செம்புலையிற் பட்டு சிவந்தாடினாற்போ ல
அம்புவியே காய்ந்தெறிய அம்புலியும்—வெங்கதிரு ம்
325 மண்ணில் மறைந்து மங்கி வான்வழிபோக் கற்றுநிற் ப
கண்ணிற் படாமல் கரந்து நிற்கும்—விண்ணுடுக்க ள்
326 இப்படியாய் மானிடரோ டிவ்வுலக வஸ்து வெலா ந்
தப்பறவே வெந்தளிந்து சாம்பலாம்—அப்பொழு து

327 எக்காளமு எழுமினெழுமினெ ன
மிக்கேல் மரித்தோர்க்கு விள்ளவே—அக்கண மே
328 ஆழியில்வாழ் மீனினங்கள் ஆய்ந்துதின்ற மெய்யெனினு ம்
ஊழிநாளிலேசேர்ந்துயிர்த துவரும்—மீளவு மே
329 அக்கினிக்குப் பட்சணமா யாற்றிலிட்ட சாம்பலு மே
அக்கணமே யொன்றியுயிர்த் தாக்கையதாம்—தொக்கா து
330 ஆகாயக்காக்கைகழு காதிநரி நாய்புலியு ண்
தேகாதியுஞ்சடமாய்ச் சேர்ந்துயிர்க்கும்—ஏகா தி
331 செத்தமனிதரொலாந் தேகத்தோ டேயுயிரா ய்
அத்தனுரையாலே அன்றெழுவார்—புத்திகெட் ட
332 பாவிஜனங்கள் படர்பசியுந் தாகமுட ன்
தீவினையுஞ் சூழத் தெருமாந்து—ஒவியம்போ ல்
333 நிற்பார் நிலைகலங்கி நெஞ்சுலர்ந்து நாவரண் டு
பற்கள் தெரிக்கும் படிகடித்துச்—செப்புவா ர்
334 யேசுபரனந்ததிரு ஏகமெய்வேதம்மிருக் க
நீசரதி வித்தமதம் நின்றோமே—நே ச
335 மனச்சாட்சி கூறியதை மாற்றி மதிகெட் டு
மனிதமுகத் தாட்சணைக்காய் வாழ்ந்தோம்—பணமென் ற
336 சம்பளத்துக்காகவல்லோ சாதித்தோம் பொய்மறை யை
கும்பிவளர்க்கவல்லோ கோதுரைத்தோம்—சம்மதமா ய்
337 ஞானிகள் போலலைந்தோம் நாடுநகரதி ய
எனிந்தக்கேடுகெட்டோ மென்னசெய்வோம்—வானர சி
338 தேவதாய் மீதுபல தேவதூஷணம் பகர்ந்தோ ம்
பாவியெனை மீட்கமனுப் பண்ணுவளோ—தேவச பை
339 முத்தர்களிலுச்சிதரும் மோட்சமதில் மாபெரி ய
சத்தியுள்ளசூசையப்பர் தாபரியார்—சத்திய மே
340 பாபமறையைப்படித்தோம் பற்பலரையேமாற் றி
சாபிக்கப்பட்டோமே தக்கதென்பார்—தாபரிக் க

341 நன்முனகால நமக்கிருந்த போதுதவ ம்
விண்டோமேமேலோர்கள் மென்மறையைக்—கொண்டிலகு ம்
342 புத்திசொல்லும்பேனைப் புரட்டினேந்தியவ ணா
நத்திப்பெரும்பாவம் நண்ணினேம்—அத்தருண ம்
343 சாவுகின்றகாலமது சம்பவித்தபின்னுமின் று
மேவியதீர்வைக்கென் விளம்புவோம்கூ வி
344 அழுதுபுரண்டும் அறைந்தும் பலனென் ன
தழனரகநம்மைத் தவிர்க்காதென்—றழுதிடுவா ர்
345 புண்ணியவான்களெல்லாம் பூரணச்சந்திரன்போ ல்
எண்ணுமிளமைகொண் டேயிருப்பார்—வண்ணமுள் ள
346 மோட்சத்திருந்துநல்ல மோட்சத்தோர் தானிறங்கு ம்
ஆச்சரியஞ் சொல்ல வடங்காது—காட்சியி லே
347 சூரியன்போற்காந்திச் சுடரொளியாய் விண்ணோர்க ள்
நேரின்றிச்சூழ்ந்து நெருங்கிவர—சூர்மாத ர்
348 பாதமதிற்சந்திரனும் பானுடையு மீன்முடியு ம்
சீதப்பிரபை திகழவே—கோதில்லா க்
349 கொஞ்சப்பிராயமதாய் கோடிவரம்பெரு க
மஞ்சுவின்மேலேறி வான்வரவே சஞ்சுவமா ய்
350 தம்பூருவீணை சரமண்டலமுர சு
கொம்பூதிபாங்காய்க் குழல்முழங்க—சங்கையாய் க்
351 கட்டியங்கள்கூற கனதாழ மேமுழங் க
அட்டதிக்கெல்லா மதிரவே—திட்டமுட ன்
352 சங்கீதவாத்தியத்தைச் சம்மனசோர்பாடிவ ர
மங்காதவானோர் மகிழ்ச்சியுடன்—அங்கத்தி ல்
353 காந்தியொளிவீசக் கனவணக்கமேபுரிந் து
வந்திவரப்பாதமதை யின்பமுடன்—சாந்தகுண த்
354 தாயார்வலதுபுரஞ் சாமியிடதுபுர ம்
மாயாவில்வீச வருவார்கள்—நேயமுள் ள

355 சென்னியிலேமுண்முடியுந் தேகமெல்லாங் காயமதா ய்
உன்னதமாஞ்சோரி யொழுகவே—மின்னுகைகா ல்
356 செய்யவிலாவில் திருக்காய மேதுலங் க
துய்யகரம்பெலும்பு தோன்றுகின்ற—மெய்யுட னே
357 மேகத்திற்ரேன்றி விண்ணேரிடையிறைவ ன்
வாகுடன்கபாலமலை வந்தபின்பு—மாகபர ன்
358 மேனிசிவந்து விழிசிவந்துவேகமுட ன்
யானையைச்சிங்க மடுத்தாற்போல்—மானத னை
359 வேங்கைதொடுத்தாற்போல் வெண்குருகுகூட்டம தை
பாங்குடனேராஜாளி பாய்ந்தாற்போல்—தாங்குகின் ற
360 மேகசிங்காசனத்தில் வேதனிருந்துகொண் டு
ஆகமதுநைய வடிபட்டுத்—தாகமுட ன்
361 பாடுபட்டநற்சிலுவை பக்கம்வலநாட் டி
தேடுலகோர்செய்தநன்மை தீவினைக்கு—நாடறி ய
362 நீதிவிளக்க நெறியேநடந்துவந் த
மாதவராம்நல்லோர் வலதுபுரம்—தீதுடை ய
363 பொல்லாரிடதுபுற மாகநின்றபின் பு
நல்லோர்கள்நேச நயமுற்றுச்—சொல்லுவா ர்
364 என்னுடையவையாநீ ரென்றுவருவீரென வே
நின்னையேநாங்கள் நினைத்திருந்தோம்—நன்னயமா ய்
365 பெற்றவளேதானறிவாள் பிள்ளைதனதரு மை
மற்றவர்கள்தானறிய மாட்டார்கள்—உற் று
366 மழைமுகங்காணுப்பயிர் போல்வாடினேந்தா யை
அழும்பிள்ளைகாணு ததுபோல்—குழம்பினே ம்
367 ஒன்றுமில்லாக்காலமதி லோர்மொழியால் வையகமு ம்
துன்னுபல பொருளுந் தோற்றுவித்தீர்—நன்றிகெட் ட
368 அக்யானமாயை யவனியெலாஞ் சுற்றிலும வ்
வக்யானத்துள்ளே யடியோர்கள்—தொக்காம ல்

369 மீண்டெடுத்துக்கொண்டீரோ வேதாவேயென்றுரைத் து
ஆண்டவனை வாழ்த்தியபின் அன்னைமரி—ஆண்டவனை ப்
370 பார்த்துரைப்பார் தாயே பராபரியே யாண்டவ ளே
சீர்த்ததயைக்கடலே செங்கதிரைப் போர்த்தவ ளே
371 மோட்சத்திருந்தெமக்காய் முப்பொருளோனைவேண் டி
மீட்சிபெறுவித்தனையே மேன்மைதுதி—மாட்சிமைசே ர்
372 நன்மரணநானடைய நாதனிடம் வேண்டிநின் ற
சஞ்சூசைமாதவனே சாஷ்டாங்கம்—கன்மஷி கு
373 தின்மைநெறி நீக்கியெனைச் சீவியநா ளேற்றிவைத் த
என்காவற்சம்மனசே எற்றிடுவேன்—நன்மைநி லை
374 அர்ச்சியசிஷ்டோரே யாண்டவனைவேண்டினதா ல்
சொற்பெரிய வுங்களுக்குத் தோத்திரமென்—றிப்படியா ய்
375 சொல்லி வணங்கித் தொழுவார்கள் பாவிக ளோ
நல்லபரனைப் பார்க்க நாணமுற்று—அல்லலுட ன்
376 கூகூவென்றேயழுது கொண்டுநிற்கத் தேவசுத ன்
மாகோபமாக வசனிப்பார்—வேகமுட ன்
377 வானவருஞ் சந்திரனும் மாகதிரு மின்னுடுவு ம்
மானமுறப் பல்லுயிரும் வண்மையுறத்—தானமைத்தே ன்
378 ஆங்காரங்கொண்டெழுந்த அண்டர்களா மூச்சபை யை
நீங்கா நரகில் நிறுத்தினேன்—பாங்கா க
379 ஆதிமனைவகுத் தாங்கவனு லாம்பிதிர்க் கு
நீதிநெறி தந்தேன் நீங்கியவர்—பாதகத்தை ச்
380 செய்ததனால் முன்னந் திரண்டபெரு நீரா ல்
வையகத்தோர்தம்மை மடித்துவிட்டேன்—ஐயம ற
381 நோயனைக்காத்தே னுவலு மவன் பிதிர்க ள்
ஆயும்புவியி லடர்ந்தபின்பு—தீயகொடு ம்
382 பாவம்பெருகினதால் பாழாக வைம்புரத் தை
வேகவெறித்தேன் வெவ்வழலால்—கோவஷி கு

383 பாரோன் பகைகெடவே பத்துவித ஆக்கினை யை
நேராகத் தந்தேன் நீர்திருந்தப்—பாரதனி ல்
384 பாதைகடல்கொடுக்கப் பண்ணினேன் மாற்றலரா ரை
வேதைபடவதிலே வீழ்த்தினேன்—ஆதரவா ய்
385 சோசுவன்போர் வேலினின்று தன்னூர் கெடக்கொன்றே ன்
மோசமதை நீங்கள் முனிந்திடவே—பேசு ம்
386 செரிக்கோவெனு நகரின் செய்யமதிழ்நீரா ய்
எரிக்கும்படியாயியற்றி—உருக்கமுள் ள
387 தாவீதன் கைக்கவணால் சண்டாளராட்சதன்ம ண்
மேவிவிழ வேமடித்து விட்டேனே—பூவுலகி ல்
388 இட்டமுடனீங்களெனை எண்ணியே யஞ்சலிக் க
இட்டபெருந் தீர்வை யெண்ணரிது—துட்டர்கா ள்
389 தங்குந்தனாமீது சற்றேனு மெண்ணும ல்
பொங்குங் கடும்பாவம் புரிந்ததனால்—உங்களுக் கு
390 வீடென்னுமோட்சம் விலகுமென்று கண்டிரங் கி
தேடிவருந் தீர்க்கத் தெரிசிகளால்—பாடனைத்து ம்
391 உங்கட்கறிவித்தேன் ஒப்பாமல் நீர்பிடித் த
சங்கைக்கேட்டைப்பின்னும் தான்புரிந்தீர்—அங்கதனா ல்
392 மாசுமிலேன் மாதுமிலேன் வல்லதொரு வானுமிலே ன்
தேசுற்ற ஐவண்ணஞ் சேர்ந்திலேன்—மாசற் ற
393 மோனவெளியாகி மூச்சுடருந் தானா கி
தானாயனாதி தற்பரன்யான்—ஊனுடை ய
394 மானிடன்போல் மண்ணகத்து மாது மரிவயிற்றி ல்
ஊனெடுத்துகன்மலையி லோர்சாரல்—தானடுத்து ப்
395 பஞ்சையைப்போலே யான் பாதியிர விற்பிறந் து
மிஞ்சு பனிகுளிரால் மெய்நடுங்கச்—சஞ்சலமா ய்
396 புல்லணையின்மீதே புரண்டழுதே னீங்கள்செய் த
வல்வினையை எண்ணி மனம் வருந்தித்—தொல்லுலகி ன்

397 எல்லாவுயிர்க்கிரண மென்றுந் தருமிளையா ன்
புல்லருய்ய வேண்டிப் புலம்பியே—வல்லகன்னி த்
398 தாய்கொங்கையுண்டேன் தவிப்பிளைப்புத் தானடைந்தே ன்
பாயுதிரமோடிடவே பார்மீதில்—சேயருக்கு ச்
399 செய்யுகின்ற சேதனத்தாற் சிந்தினது சோரிமி க
வையகத்தில் மெத்த வருந்தினேன்—கைவிரலா ல்
400 மூவுலக மேந்துமென்னை மூலாக்கினியேந் த
தாவுமவள் தன்கரத்திற் ருெடுங்கி—மேவினே ன்
401 மூன்ருண்டிங் நாடலைந்து மோட்சநெறி யைமொழிந் து
நான்றவித்தே னன்னமுடை நாதியற்று—ஏன்றவித்தே ன்
402 பூங்காவிலென்னையன்று பிடித்திழுத்துத் தூஷணித் து
ஆங்காரர் வைத்த அடிகளிதோ—நோங்கு ம்
403 கயிருல் வரிந்திருக்கிக் கட்டிவைத்த கைகளி தோ
மயிரைப்பிடித்திழுத்த வாதையிதோ—கயிறுட னே
404 வீசியிழுக்க விழுந்தநெற்றிக் காயமி தோ
தூஷித்துக் காரியுமிழ் துப்புமிதோ—நீசர்களு ம்
405 காலாலுதைத்த கனவீக்கக் காயமி தோ
மேலாதியந்தமுற்ற வேதையிதோ—தாலமதி ல்
406 நெட்ரே யெத்தனத்தால் ரெத்தவெறி கொண்டவர்க ள்
கற்றூணிலேயடித்த காயமிதோ—தட்டர்க ள்
407 கன்னத்தடிக்கக் கலங்கியசெங் கண்களி தோ
உன்னரிய சொர்ன ஒளிதிகழுஞ்—சென்னியி லே
408 முள்முடியைவைத்தழுத்தி மூங்கிற் றடிகளினு ல்
துள்ள வடித்தவந்த சோரியிதோ—வல்லபுய ம்
409 பாரச்சிலுவை படிந்த திருக் காயமி தோ
வீரர்களாற் குத்துண்ட வீக்கமிதோ—கோரத்தா ல்
410 வாய்மூக்கிலன்று வடிந்த செந்நீர்த் துள்ளியி தோ
பாய்மெய்நரம்பெலும்பைப் பாருங்கள்—தூயனெனை ப்

411 பாரக்குருசிலன்று பாதகர்கள் நீட்டிவைத்து க்
கூராணியிட்ட குறிகளிதோ—சோரா து
412 நாலாவிதத்தினிலும் நான்றவித்த வேளையி லே
மாலான நஞ்சுண்ட வாயுமிதோ—கோலமுட ன்
413 மண்ணுலகிற் பாடுபட்டு மானிடரோ யுங்களுக்கா ய்
என்னுயிரைத் தந்தேன் என்மறந்தீர்—மண்ணுல கை
414 மீட்டிறந்தபின்னே வீலாவிலேயூடுரு வி
ஈட்டி பிளந்த இதயமிதோ—தேட்டமுட ன்
415 பாடுபட்ட காயமெல்லாம் பாருங்கள் பாவிக ளே
ஆடுபட்ட பாடா மதுபோல—நாடதனி ல்
416 பார்க்கவடங்காத பாடுபட்டேன் கள்ளனைப்போ ல்
யார்க்குப்பகைசெய்தே னம்புவியில்—சேர்க்கு ம்
417 பொருள் களவு செய்தேனோ பொய்பேசி மாந்த ர்
மருள்கலகந்தோன்ற வகைவைத்து—இருளதனி ல்
418 கன்னமிட்டு மாந்தர் கழுத்தை யறுத்தே னோ
மின்னிணையார் தம்மயலில் வீழ்ந்தேனோ—இன்னமுந்தா ன்
419 என்னகுற்றஞ் செய்தேனா னிப்படியே பாடுபட ப்
பண்ணுமுங்கள் பாவப் பலனல்லோ—மன்னும்யா ன்
420 செய்தநன்றி யோரளவோ செய்தபொருட் கோர்வகை யோ
ஐயமற வெல்லா மளித்தேனே—உய்யுதற் கு
421 எந்தனினடையாள மென்னுஞ்சிலுவைத னை
இந்தரையில் வைத்தேன் எண்ணுதற்கு—நிந்தனையாய் த்
422 தூஷணித்தீர் பாவிகளே தூயசிலுவையைநீ ர்
தூஷணித்தீ ரென்சபையை தொன்னெறியைப்—பூசிக் க
423 அப்போதடைந்த அவமான வாதையெலா ம்
இப்போது பாருங்க ளென்னையே—இப்படியாய் க்
424 கண்டேயறியாமல் கர்சினியி லென்சுரூப ம்
விண்டேபழித்தீர்கள் வீணர்காள்—பண்டுமுன் னே

425 பொய்யைப் பிடித்துப் புலம்பியலைந்தீர்க ள்
மெய்யை மறுதலித்து விட்டுவிட்டீர்—மெய்வழியா ஞ்
426 சத்தியவேதமென்றால் தள்ளென்று சொல்லிய தை
நித்தியமும் வேம்பாய் நினைத்தீரோ—சத்தியனை க்
427 கேலிக்கை செய்தீரோ கேடாகத் தூஷணித்தீ ர்
வேலிகள் போட்டு விலக்கினீர்—தாலமதி ல்
428 சண்டையுங் காமச் சதிசெயதீர் புத்திமி க
விண்டோரை நாடாமல் வெட்கினீர்—மண்டலத்தி ல்
429 பிள்ளைக்கு நோய்தீரப் பெற்றெடுத்த தாய்மருந் து
கொள்ளுதல் போலுங்கள் கொடும்பழிக்கு—உள்ளதொ ரு
430 பாடுபட்ட நன்மருந்தாய்ப் பண்ணியவென் தேகமது ந்
தேடரிய சென்னீருஞ் செய்யுணவாய்—நாடவைத்தே ன்
431 பின்னுமுளமானிடர்கள் பேசரிய சத்தியத் தை
நன்மையெனக்கண்டு நடப்பதற்கு—முன்னுள் ள
432 பொய்க்குருக்கள் நீங்குதற்கும் பொய்மறைகள் மாறுதற்கு ம்
மெய்க்குருவை வைத்தேன் விளக்குமுறச்—சற்குருக்க ள்
433 பட்டங்கொடுத்தேன் பரன்பூசை பண்ணென வே
திட்டங்கொடுத்தேன் செகதலத்தில் - இட்டமுட ன்
434 எல்லாவரமீந்தேன் எந்தைபகைஞரை யே
வெல்லவரமீந்தேனுன் மேதினியில்—வல்வினையா ல்
435 உன்னைப்பகைத்தோர்கள் ஊழூழி காலமெல்லா ம்
என்னைப்பகைத்தோர்கள் என்றேனே—அன்னதி ரு
436 சற்குருக்களைக்காணாச் சண்டாளப்பாவிக ளே
பொய்க்குருக்களைக்காணப் போனீரோ—சற்குருக்க ள்
437 சத்தியவேதந்தனையறிந்து கெட்டவர்க் கு
மெத்தவுண்டு ஆக்கினைகள் மென்மேலும்—புத்தியுட ன்
438 மூன்றாசையுங்கடந்த மோசமில்லாச் சற்குரு வை
என்றான் பழித்தீர் இடறாகத்—தோன்றவெலனு ம்

439 என் சீஷனைப் பழித்த தென்னைப்பழித்தவித ம்
என்னவறியா திருந்தீரோ—நன்மனதா ய்

440 என்னைப்பணிந்தோர்க ளென்சீட ராவரொன் று
முன்னேயறிவீரோ மூடர்களே—முன்னறிந்து ம்

441 வேதமதிலுள்ளோர்க்கே வேகமுடன் தீங்குசெய்தீ ர்
பாதையாராய்ந்து நிதம் பாராமல்—தீதுட னே

442 எந்தனுக்கு வேறுதெய்வம் எண்றேமதிமயங்கி ச்
சிந்தையுற்றுக்கண்டதெலாந் தெண்டனிட்டீர்—முந்த வே

443 சென்மப்பவம்போக்கித் தீட்சையுமாபெரி ய
கன்மப்பவப்பொறுத்தல் கற்பித்தேன்—உன்னும ல்

444 தம்மாலே தாங்கெட்டுத் தாழ்நரகிற் போகின்றீ ர்
எம்மாலே குற்றமில்லை யெள்ளளவும்—உம்மா ல்

445 எமக்கோர்பலனுண்டோ ஈனர்களே யெம்மா லே
உமக்குமிகு நன்மையுண்டு ஓ வீழ்ந்தீர்—எமக்கென் ன

446 என்னை வணங்கிவந்தால் எப்போது மோட்சமதி ல்
நன்மையுடன் வைப்பேனே நான்மகிழ்ந்து—கன்மமுற் று

447 ஊனமுள்ள கண்கள் ஒளியைப்பாராததுபோ ல்
ஈனர்களே நீங்களெனைப் பார்க்க—நாணமுற் று

448 மண்ணிற்பணத்தை மதித்தீர் மனம்பொருந் தி
எண்ணினீரோவென்னை யிலையேநீர்—கண்ணுகின் ற

449 ஆத்துமத்தின்பிழைப்பை யாராய்ந்துபாராம ல்
ஊத்தையுடல்பிழைப்பி லொட்டிவிட்டீர்—நேர்த்தியுட ன்

450 பூவுலகிலென்னைப் புகழ்ந்துநினைப்பீரென வே
சாவு பசி நோய்களையுந் தானீய்ந்தேன்—சாவதனி ல்

451 என்னைநினையாமல் எப்போது மய்யான ம்
தன்னை நினைத்துச் சாதித்தீர்—பின்னையு மே

452 எக்காரணத்தாலு மெம்மதத்தோணாக்கொலினு ம்
தக்கப்பதவியெனச் சாதித்தீர்—வெட்கமற் ற

453 காமாதுரனெவனுங் கத்தருக்கு மந்திரி யோ
ஏமாந்து கையெடுத்தீ ரீனர்களே—நாமாஹ ல்

454 பெண்ணாசை பாவமெனப் பேசியதை யுண்ணு தி
பெண்மோக மோட்சமென்றீர் பித்தரோ—இன்னமுநீ ர்

455 தாரணியின் பாக்கியத்தைத் தான்விரும்பி யும்முடை ய
சீரணியும் பாக்கியத்தைத் தேடினீர்—பாராரு ம்

456 மாடெங்கே யாடெங்கே வண்மையுட னேவாழ்ந் த
வீடெங்கே ராஜ விமானமெங்கே—நாடெங் கே

457 பாக்கியங்களெங்கே பவுசெங்கே காசுமெங் கே
யோக்கியங்களெங்கே யொழுக்கமெங்கே—யோக்கியத் தை

458 நம்பியெனை மறந்தீர் நாய்களே யெப்போது ங்
கும்பியெறிநரகைக் கோரினீர்—சம்பிரஞ்சே ர்

459 உல்லாசமெங்கே உயர்ந்த கடுக்கனெங் கே
சல்லாபமெங்கே சரசமெங்கே—பொல்லா த

460 மேட்டிமைகளெங்கே விருதெங்கே சுற்றமெங் கே
தாட்டிகங்களெங்கே தனமெங்கே—மேட்டிமையா ய்

461 பெண்மீதில் வைத்தபட்சம் பேசருமெம் மீதுவைத்தா ல்
வண்மையுள்ள மோட்சமதில் வாழ்வீரோ—மண்மீதி ல்

462 பெண்ணையே நம்பிப் பெருங்கதியைத் தான்மறந்தீ ர்
எண்ணரியநன்மை யியற்றுமெனை—எண்ணி யே

463 இந்தநன்மையெலா மீய்ந்த பரனென வே
சிந்தையுற்றுத்தேடா திருந்தீரோ—இந்தவை யி ல்

464 அற்பவாழ்வுக்காக வன்புவைத்தீ ரிவ்வாழ்வி ன்
நிர்ப்பாக்கியமுமக்கு நேர்ந்ததே—அப்போ து

465 பாவிகளே பேய்கபடாய்ப் பண்ணிவைத்த வஞ்சகத் தை
மேவியுற்றுப்பாராமல் வேண்டினீர்—ஆவலுட ன்

466 பாவிகளே நம்முகத்தைப் பார்க்கவே ஞாயமுண் டோ
பாவிகளே பேய்க்கடிமைப் பட்டீரோ—பூவுலகி ல்

467 பொல்லாத பேயைப் பொருளெனவே நம்பியந்த ப்
பொல்லாத பேயைப் புகழ்ந்தீரோ—பொல்லா ரோ
468 பசித்துவந்தே னென்முகத்தைப் பாராது நீங்க ள்
புசிக்கக் கதவடைத்துட் போனீரோ—தசைவளர்க் க
469 தின்று சுகித்தீரோ சேர்ந்தவினர் நேயரொ டு
இன்றுமையென் பந்தியிலே யேற்பேனோ—நன்று ன
470 ஆடையுடுத்தீர் அணிபணிகளைப்பூண்டீ ர்
வாடைகுளி ராலேயான் வாடிவந்தேன்—தேடவில் லை
471 தேடாதஉங்களையென் செல்வகதிவீட்டிலுள் ள
ஆடைகளாலும்மை யலங்கரியேன்—வாடினைந் து
472 தாகித்துவந்தேன் சலபானந் தந்ததில் லை
ஏங்யலார் மாளிகைக்கென் றெக்கிவிட்டீர்—வேகமுட ன்
473 தள்ளிவிட்டவுங்களுக்கே சாலோகநாட்டிலுள் ள
தெள்ளிய சீவசலஞ் சிக்குமோ—உள்ளப டி
474 ஓர்பாத்தி ரஞ்சலநீர் உண்ண வளிப்பவர்க் கு
நேர்வோம் பலனென்வே நிண்ணயித்தோம்—தீர்மான ம்
475 என்னவசரத்தினுக்கு இரங்காது போனாலு ம்
உன்லாபத்தையேனு மொப்பவில்லை—இன்னமுங்கே ள்
476 பிச்சையிடுங்களெனப் பின்னுமுமக் காடையன்ன ம்
மிச்சங்கொடுத்தோமே மேதினியிற்—பட்சமுட ன்
477 நம்முடைய சொத்தை நமக்கீயவேண்டா மோ
தம்மதென வெண்ணியல்லோ சாதித்தீர்—இம்மையி லே
478 ஒன்றுக்கு நூறாக உத்தரிப்போ மென்றுரு தி
அன்றியாமுரைத்ததிலோர் அச்சரமுங்—குன்றிடு மோ
479 எம்முடைய வாக்கியத்தின் இன்மையைப் பரிட்சைசெய் து
சம்மதிபோல் நீர்நடந்தால் தப்பாதே—நம்மா ணை
480 திக்கற்ற ஏழைபர தேசியென நானலைந் து
தக்கவுங்கள் வீடுகளிற் றங்கவந்தேன்—அக்கால ம்

481 என்னைப்பிறக்கணித்தீர் இல்லிடமு மில்லையென்றீ ர்
என்பிதா வீட்டிலுமக் கில்லையிடம்—இன்னு ம்
482 சிறையிலிருந்தவெனைச் சீராட்டியோம்பாம ல்
அறையிலிருந்தவனை யாதரித்தீர்—தனைதனி லே
483 நோய்பிடித்து மெய்யிளைத்து நொந்தவெனைத் தேற்றும ல்
தாய்சனனைத் தற்காத்தீர் சாத்தானும்—பே யே
484 பொறுதியின் நாட்கடந்து போன தெக்காலு ம்
இறுதிநாட்சம்பவமு மேதோ—அறியுமென்பா ர்
485 என்றவுடனேயசடர் ஏங்கிப்பயந்தல றி
பன்றிகள்போ லேகதறி பாவிகளும்—நின்றிறைந் து
486 என்றுபசி தாகநோய் இல்லிடந்தா வென்றுவந்தீ ர்
அன்றுபிறக்கணித்தோ மல்லவென்பார்—என்றவுட ன்
487 ஏழைமுகம்பாரானீர் என்னையே பிறக்கணித்தீ ர்
பாழண்டவீரொன்று பரஞ்சோதி—மீளவுமோ ர்
488 அச்சரமும் புள்ளிமுதல் அற்பமு மாறாதென்பா ன்
நிச்சயித்த சத்தியத்தை நிந்தித்தீர்—தற்சன ரோ
489 சத்திய திருச்சபையைத் தப்பிலாதென்றனாந்தே ன்
சத்தியந்தவறினதாய்ச் சாதித்தீர்—நித்தியமு ம்
490 ஆடுகளைமேய்ப்பதற்கோ ராயனையான்வைத்திருக் க
ஆடுகளையாயனையும் அல்லவென்றீர்—தேடிவந் த
491 ஆயன் குறற்கேளா தக்கிரம லுத்தரி ன
நாயின் குலக்கொடிக்கே நாசமென—ஓயுமுன ஃ
492 பாவிகளெல்லாம் பயந்து நடுநடுங் க
கூவும்ராசாளிகண்ட கொக்கதுபோல்—கூவிநிற் க
493 அம்பரன்றன்முன்னே அரும்பாவியானபே ய்
வெம்பியே சொல்லும் விபரங்கேள்—எம்பர னே
494 திட்டமுடனென்னையிவர் சிந்தித்துத் தோத்தரிக் க
கட்டிவைத்தேன் பொய்ச்சரிதை காசினியில்—திட்டமுட ன்

495 பூவெடுத்து நானிவனை பூசையது பண்ணவைத்தே ன்
காவுகொடுக்கமுறை கட்டினேன்—பூவுலகி ல்
496 கனகதேரோடவைத்தேன் கை கட்டி நின் று
எனக்குத் துதிபுரிய ஏவி—கனத்தபெரு ங்
497 கார்மலையைக் கும்பிடென்றேன் காவினிலே யென்றனுக்கு ப்
பாரறியப் பொங்கலிடப் பண்ணினேன்—கூர்விழிசே ர்
498 மங்கைமேலாவேசம் வந்து படைத்ததனை ச்
சங்கையுடன் பட்சியென்று சாற்றினேன் அங்கதி லே
499 என்னநான் தின்றேனென் றென்வயிற்றை யெக்கிவிட்டே ன்
பின்னையு மேபடைத்தார் பேராக—வன்கபட ம்
500 என்னை வணங்காதே என்றுதலை யைச்சிரைத் து
மின்னுசெருப்பா லடித்துவிட்டேனே—வன்னியதா ல்
501 தோளிலேசுட்டேன் தோகையைச் சிறைப் பிடித்தே ன்
நாளுமேயென்றனைத்தான் நம்பிவந்தார்—நாளதனி ல்
502 அம்மணத்தோடேயணைய வைத்தேன் பித்தரைப்போ ல்
செம்மைகெடப் பெண்களை சீரழித்தேன்—இம்முறையா ல்
503 வெட்கிவிடுவாரெனவே வேணவிதஞ் செய்தேனு ன்
வெட்காமலென்னை விரும்பிவந்தார்—தக்கப டி
504 உன்றனுக்கு செய்யும் உயர்வான தோத்திரங்க ள்
என்றனுக்கொவ்வாதென் றெண்ணியேநான்—வந்தவ ரை
505 என்கோவில்முன்னே எதிராய் வணங்காம ல்
வன்பாய் வணங்கு வடக்கென்றேன்—அன்பாக த்
506 தண்ணீரைச் சூரியனைச் சாணநெருப்பையரு கை
மண்ணுடனே கல்லை வணங்குவென்றேன்—எண்ணமற் று
507 மாடு பன்றி நாய் பருந்து வானரந் தீ மூஞ்சூறெ லி
கோடுடைய யானையையுங் கும்பிடென்றேன்—மூடர்க ளை
508 ஆண்குறியைப் பெண்குறியை ஆவிடையார் லிங்கமென் று
நாணமற வேண்டவைத்தேன் நானிலத்தில் மானமற் று

509 அங்கவுடையைக்களைந்து அம்மணமாய்ப் பெண்ணைவைத் து
சங்கையுடன் கைதொழெனச் சாற்றினேன்—எங்கணு மே
510 பள்ளர் பறைச்சி பகடை குறத்தியையு ம்
வள்ளுவர் தொட்டியனை வாழ்த்துவென்றேன்—உள்ளப டி
511 வேசிவிபசாரி விலைமாதர் சாதிகெட் ட
நீசர்களைத்தொழுக நேமித்தேன்—காசினியி ல்
512 நாலுவேதத்தினிலும் நான்வசித்துத் தந்திரத்தா ல்
காலாகோலத்தைக் கரந்தமைத்தேன்—மேலு ம்
513 சகலபுராணத்திலும் சர்வேஸ்பரன்றனை யே
புகலா தொழுகப் புணர்த்தி—வகுத்ததிலு ம்
514 ஒன்றான தெய்வம் ஒருவனென வெண்ணும ல்
நன்றான பெண்ணையே நாடவைத்தேன்—கன்னிட வே
515 வேதமொன்றே மந்தையொன்றே மேய்ப்பனொன்றே என்று
[முன்னற்
ஓதியவும் வாக்கியத்தை உன்னுதிப்—பாதகர்க ள்
516 வேதியர்கள் தாங்களென்றும் வேதமதை சீர்திருத்து ம்
பாதிரிகளென்று தம்மைப் பாராட்டிச் சாதனையா ய்
517 வேதவசனப்பொருளை வேறாக்கித் தாம்புகலு ம்
போதனைக்குச் சார்பாகப் பொய்யிசைத்தார்—நீ த
518 திருச்சபையை வெல்லாது தீநரகமென் றீ ர்
திருத்தமென வேறுசபை சேர்ந்தார்—குருத்துரோக ர்
519 பாவசங்கீர்த்தனத்தைப் பண்ணுவது கஷ்டமென த்
தேவனிடம் பாவமெல்லாஞ் செப்புமென்றார்—பூவுலகி ல்
520 சுத்தபோசனந்தவசு துய்யஒருசந்திமுற்றாய் க்
கத்தருத்தரிப்பிற்குறை காணுமென்றார்—இத்தரையி ல்
521 எத்தனை தீ தென்னிலுநம் யேசுபரன்பாடுபட் டு
உத்தரித்தானதென ஓதினர்—பித்தரா ய்
522 சந்நியாச அந்தஸ்தைத் தாறுமாறானதெ ன
அந்யாயம்பேசி அவமதித்தார்—உன்னதமா ய்

523 பொய்யாத்திருச்சபையின் போதகத்திற் பேதலிப்போ ர்
மெய்யாய் அஞ்ஞான ரொன்றீர் வேதமதில்—ஐயாநீ ர்
524 பாருலகி லாராய்ந்து பாராமற் கெட்டலைந்தா ர்
பாருமிதோ வென்பங்கிற் பட்டவர்கள்—சேருமென் று
525 பேய்கள்தான் சொன்னபின்பு பேசரிய வாண்டவன்றா ன்
ஞாயங்கள்காட்டி நடுவறுக்க—நேயமுள் ள
526 காவலாஞ் சம்மனசே கன்மியிவர் செய்தநல ம்
மேவியே சொல்கவென விள்ளஅவர்—பாவமன் றி
527 நன்மையொன்றுங் காணாதால் நாணிநிற்பார் சம்மனசோ ர்
இன்மையெனக்காரமுற்றார் யேசுபரன்—துன்மனர்க் கு
528 ஒவ்வொருவனைக்காட்டி யோதுமிவர் செய்தபவ ம்
எவ்வகையெனப்பே யிசைப்பதுகேள்—செவ்வையதா ய்
529 அஞ்ஞானரும்மை யறியாது கேடுகெட்டா ர்
மெஞ்ஞானர் கெட்டதன்மை விள்ளுகிறோம்—எஞ்ஞான்று ம்
530 வேதத்திலேபிறந்தும் வேதத்தோ ருள்வளர்ந்து ம்
வேதத்துக் கடாது வேடமிட்டார்—பாதகமா ய்
531 கண்டதெலாந் தெய்வமெனக் கையெடுத்தார் ரூபமென க்
கொண்டதெலாஞ் சாமியெனக் கும்பிட்டார்-திண்டுமுண்டாய்
532 என்னையு மும்மையுமோ ரீடாகப் போற்றிநின்றா ர்
இன்னுமென்னை முக்கியங்கை யேந்திவந்தார்—பின்னையு மே
533 ஏழைகளின் சொத்தை ஏமாற்றிக் கையாண்டா ர்
வாழப்பொராது மனமெரிந்தார்—மீளவு மே
534 ஆலயத்தின் சொத்தை யபகரித்தார் ஞாயறன் று
வேலைசெய்து பூசை விலகிநின்றார்—தாலமதி ல்
535 என்பேரைச்சொல்லிவந்தோர்க் கீய்ந்தார்கள் காசுபண ம்
உன்பேரால் வந்தவரை யோட்டிவிட்டார்—வன்கொடிய ர்
536 என்னாலே நன்மைதின்மை யீடேற்றஞ் சித்தியென் று
உன்னைமவந் தென்பேரை யுச்சரித்தார்—இன்னமு மே

537 வேதந் தனைமறந்தார் வேண்டுதலை யும்மறந்தார்
நீதி விசுவாச நினைவளிந்தார்—பாதகமாய்க்
538 குட்டை மரக்காலால் குறைத்தார்கள் தானியத்தை
வட்டி யனியாயமதாய் வாங்கிவந்தார்—துட்டர்கள்
539 மாய வாழ்வாலே மதிமயங்கிக் கெட்டலைந்தார்
தாயாரைத் தந்தையரைத் தானடித்தார்—நேயமுள்ள
540 பெண்டு மனமெறியப் பின்னொருபெண் ணாசைவைத்தார்
குண்டுனியாற் சுற்றங் கொதிக்கவிட்டார்—பெண்டுகளும்
541 கொண்டவனைப் பேணாமல் கூசாம லேயழகாய்
கண்டவனைச் சேர்ந்தார் கசடருந்தான்—என்றவுடன்
542 கண் சிவக்க மெய்துடிக்கக் கார்மேகக் கர்ச்சனையாய்
விண்ணடுங்க யேசுபரன் விள்ளுவார்—மண்வெடிக்க
543 பாபிகளே பேய்களின் பாரிசமாகக் கடவீர்
சாபமிட்டோந் தூதர்களே தள்ளுமென்பார்—கோபமுடன்
544 சொன்னவுடன் பேய்கள் துடுக்காகக் கொக்கரித்து
அன்னவரை நெட்டி அழல் நரகில்—சின்னமதாய்
545 பண்ணாத வாக்கினைகள் பண்ணிவைக்கு மோயாமல்
புண்ணாக மேனி பொசுங்கிடவே—பன்னரிய
546 சங்கிலிகொண் டேயடிக்கும் சாட்டையினா லேவீசும்
மங்கிடவே தீயினிலே வாட்டுமே—அங்கிக்
547 குறடுகள்கொண் டேபிடுங்கிக் கூசாமற் கம்பிச்
சரடுகள்கொண் டேவாயைத் தைக்குமே—முறடான
548 வேலாலே குத்தி விலாவெலும்பெல் லாந்துளைக்கும்
சாலக் கொடுமழுவைத் தான்சொரியும்—மேலெல்லாம்
549 பொல்லாத காந்தல் புகையும் கோரமதாய்த்
தள்ளா விருட்டாகத் தானிருக்க—அல்லலுறும்
550 பாவிகள் நின்று பரதவித்துச் சொல்லிடுவார்
தேவனைத்தே டாதிருந்த தீங்கான—பாவமதால்

551 ஊழூழிகால மொழியாத தீநரகி ல்
பாழுடனே வேகப் பரிசுபெற்றோம்—வாழ்கவென் று
552 புத்தி மிகச் சொன்னவர்க்குப் பொல்லாங்கைத் தேடினோ ம்
பத்தியுள்ள பேரைப் பழித்தோமே—நித்தியமு ம்
553 மாமிச இச்சையிலே வாடினைந்த சண்டாள க்
காமியன்சொல் மார்க்கமதைக் கையேற்றோம்—பூமியி லே
554 மேசியாவாகவந்த மெய்யான ரட்சக னை
ஈசாநபியெனவே ஏசினோம்—கூசாம ல்
555 மெய்வேதப்பெண்கள் விதவைகளாய்ப் போகவென் று
கையெடுத்துக்கும்பிட்டோம் காரணனை—ஐயை யோ
556 வாய்மதங்கள்பேசி வல்லபரனைப்பகைத்தோ ம்
பேய்களுடன் தீநரகப் பீழையுற்றோம்—ஞாயமி து
557 என்றழுது தீயோர் எரிநரகிற் போனபின் பு
தொண்டரையே பார்த்துரைப்பார் தூயபரன்—குன்று த
558 என்மறையைத் தானுணர்ந்தீர் என்பேரிலன்புவைத்தீ ர்
கன்மமாம் பொல்லாக் கசடொழித்தீர்—நன்று ய்
559 அறநெறியைக் கைக்கொண்டீர் அல்லும்பகலு ம்
மறவாமலுன்னி வணங்கி—துறவீ ர்
560 உலகவாழ் வைவெறுத்தீர் ஊணிழந்தீர் பின்னு ம்
பலவிதமாய்க் காயம் பதைத்தீர்—நலமடை ய
561 என்னைத் தொடர்ந்ததனால் என்போலுலகினி லே
கன்மமுறும் பாசங் கயிற்றியே—தன்மமி க
562 நிந்தனையைத் தாமொறுத்தீர் நீர்பிறந்த நாடுவிட் டு
வந்துபிற தேசத்தோர் வானெறியில்—உந்துதற் கு
563 பலநலங்களைச்செய்தீர் பாதகராந் தீயோ ர்
சிலரால் வதையுண்டு செத்தீர்—நலமா ன
564 என்கதியை நம்பியே எப்பொருட்டா லும்முயி ரை
அன்புடனே தந்தீ ரருளுடையீர்—தென்புட னே

565 வேதனையி லென் துணையை வேண்டினீர் பேய்மதத் தை
நீதியுடன் வென்று நிலைநின் றீர்—சீத ப்
566 பிறையடியாளென்றுயின் பேறருளைநா டி
கறையாரும் பாவங் கடந்தீர்—மறைபுகழு ம்
567 மோனரிலே மோனொந்தை மோட்சநகர் நூதனரொ ன்
ஞானதந்தை யாதரவு நாடினீர்—வானவர்க ள்
568 அர்ச்சியசிஷ்டர்களின் ஆதரவைத் தேடியநீ ர்
நிச்சயமாய் மோட்சமதில் நீளிப்பீர்—உச்சிதமா ய்
569 புண்ணியக் கருத்துடனே பூமானுந் தேவியெ ன
எண்ணி யறநெறியில் ஏதினீர்—கண்போன் ற
570 சிறுவர்களைப் பெற்றுத் தீயவழி நீத் து
மறுவற்ற நல்ல வழியில்—உறுவதற் கு
571 நல்ல புத்தி சொல்லிவந்தீர் நாடு பிணியதிலு ங்
கொல்லும் பலகொடுமைக் கூறதிலும்—வெல்லு ம்
572 வகையருள வேணுமென்று மன்றாடித் துன்ப ம்
பகையுறுத்தீ ரென்றனுக்காய்ப் பாரில்—தொகைப்பட் ட
573 நல்லறங்கள் செய்தீர் நாடிவரும் பஞ்சைகட்கு ப்
புல்லும் பிணியாளர் போதகர்க்கும்—நல் ல
574 வரிசை மிகச் செய்தீர் வானிறைவ னென்னை த்
தரிசித்தீர் யாசகர்க்குத் தானம்—புரிந்தீ ர்
575 பத்து நெறிப்படியே பாருலகி லேநடந் தீ
சத்தியத்தை நீங்காத் தவமுடித்தீர்—நித்த நித்த ம்
576 நாடித் திருச்சபையின் நல்லொழுக்கந் தப்பாம ல்
வீடிழந்த பேர்களுக்கு வீடளித்தீர்—வா டி
577 உடையின்றி வந்தோர்க்கு உடையளித்தீர் தா யை
இடையிழந்த பாலனா யீடேற்றிப்—படியி ல்
578 பிணியாளர் தம்மை பிரியமொடு கண்டீ ர்
தனிச்சிறை வைத்தோரைத் தரிசித்—தினிதாக த்

579 தாகித்து வந்தேன் சலபானந் தந்ததற்காய்   ய்
பாகித்து மோட்ச பலனளிப்பேன்—லோகமதி   ல்
580 என்னிமித்தம் ஆஸ்திகளை எங்காது நீர்வெறுத்தீ   ர்
உன்னதத்திற் செல்வர்களாயோங்கவைப்பேன்—நன்னயமாய்
581 சாந்தகுணர் பாக்கியரோ சற்சனரோ நீங்களின்ப   ம்
வர்ந்து சந்தோ ஷித்திருப்பீர் என்னுடனே—சாந்தனையு   ம்
582 துக்கமனஸ் தாபமுற்று சோம்பியநீர் பாக்கியர்தா   ன்
மிக்க பூரிப்படைவீர் விண்பதியில்—எக்காலு   ம்
583 நீதியிற்றுகமுற்ற நீவிரோ பாக்கியரா   ம்
ஓதரிய பூரணத்தா லுள்ளுவப்பிற்—சாதகமா   ய்
584 மற்றவர்கள் மீதிரக்கம் வைத்திரோ பாக்கியரா   ம்
உற்றதயா ளத்தையடைந் துய்த்திருப்பீர்—முற்றிலு   மே
585 தூயமனர் பாக்கியர்தான் சேரதியானந்தசு   ப
நேயகாட்சியையடைவீர் நீடூழி—தேயமதி   ல்
586 பந்து சமாதானர்களே பாக்கியவாளர்நீவீ   ர்
எந்தையின் புத்திரராய் எண்ணுறுவீர்—சொந்தமா   ய்
587 நீதியின் நிமித்தியமாய் நிற்பந்தத்தைச் சகித்தீ   ர்
ஆதலால் மோட்சநகர்க் காதீனர்—பூதலத்தி   ல்
588 பித்தர்போ லேதிரிந்து பேறுலகில் நிந்தைவ   சை
[illegible]யு மேசகித்தீர் அன்புடையீர்—பக்தர்க   ளே
589 நித்தியத்திலுங்களுக்காய் நேமித்து வைத்திருக்கு   ம்
[illegible]ாசனத்தை வந்து பாருங்கள்—சத்தியமா   ய்
590 ஒன்றுக்கு நூறெனயான் ஓதியருள் வாக்கியத்   தை
இன்றுறுதி நிச்சயிப்பீர் எல்லவரும்—நன்று   க
591 ஆகையினு லென்றந்தை யன்புடையீ ருங்களுக்   கு
வாகையுடன் கொடுக்கும் வாழ்வதனில்—தாகமுட   ன்
592 வாழ்க வருவீரென் மக்களே யென்றுரைத்   து
தாழ்வில்லாத் தன்கையாற் றுணையணைத்து—யாழுட   னே

593 இயல்பலவு மேயியம்பி யெண்ணெண்ணுதூத ர்
செயல்பெறவே நல்லவனைச் சேர்ந்து—நயமா க
594 முன்வருவார் கோடி முகமனுரைத் தேயவர்க்கு ப்
பின்வருவார் கோடி பிரியமுடன்—நன்மலர்க ள்
595 தூவிடுவா ராயிரருந் தூயமணி நீர் சொரிந் து
மேவிடுவாராயிரரும் மேன்மையாய்த்—தாவி யே
596 இந்த விதமா யெழிலிமையோர் தாம்பர வ
அந்தமுள் மோட்ச மதிலவனை—எந்தைபர ன்
597 கொண்டுவிடுவாரங்கு கோடி கதிரவன்போ ல்
மண்டு கதிர்வீசும் மகுடமது—கொண் டு
598 கவிப்பாரவர் சிரசில் காதலுடனேயாசீ ர்
புவியிலில்லா நல்வரமும் புரிவார்—தவியாம ல்
599 மானமுற்று மாசின்றி மாயாக்கதியதனி ல்
ஈனமின்றி வாழ்வா ரினிமையாய்த் தேன்மலரா ற்
600 புவிவாழி போற்றும் புகழ்வாழி வித்வ ர்
கவிவாழி மிக்கக்—கனிந்து.

4MKCT, A
178243
600 008.